
திருவருள் மிகு

ஸ்ரீ தேவி கருமாரி அம்மன் ஸ்ரீ ஐயப்ப சுவாமி திருக்கோவில்



# கும்பாபிஷேக சிறப்பு மலர்

மலர் வெளியீடு : 09. 05. 1996

255.12
ஸ்ரீதேவி
SL/PR

*With Best Compliments From:*

# Unigraphics (Pte) Ltd.

732, Maradana Road, Colombo 10, Sri Lanka.
Telephone : 694538, 693730
Fax : 94 - 1 - 693731
Res : 541302, 323914

ஓம் சக்தி



கொழும்புத் தமிழ்ச் சங்கம்
கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்திற்கு
திரு/திருமதி/செல்வி
சி. இ. ஆறுமுகம்
அவர்கள் நன்கொடையாக அளித்தது
திகதி 13/11/04

## திருவருள் மிகு

# ஸ்ரீ தேவி கருமாரி அம்மன் ஸ்ரீ ஐயப்ப சுவாமி திருக்கோவில்

## கும்பாபிஷேகசிறப்பு மலர்

மலர் வெளியீடு :

**09. 05. 1996**

உ

ஸ்ரீ விக்ன விநாயகர் துணை



# சமர்ப்பணம்

திருவளர் மார்பன் திரு நிறை சோதரியாய்
மருவளர் பூம்பொழில் சூழ் மாநகர் கொழும்பின்
குருவளர் கொள்ளுப்பிட்டி "அஸ்ரல்" நவதளபதியுறை
கருவளர் பல்லுயிருய்ய கருணைதரு கருமாரி பாதசரணம்

ஆன்மீக மணம் பரப்பி அன்னை கருமாரி புகழ்பாடும்
"கும்பா பிஷேக மலரை"
திரிபுர சுந்தரியாம் ஸ்ரீ கருமாரி அம்மாவின்
பொற் பாத கமலத்திருவடியில் சமர்ப்பிக்கின்றோம்

ஓம் சாந்தி...... சாந்தி....... சாந்தி......

# மலரும் மணமும்

***துன்னையூர் ராம். தேவலோகேஸ்வரக் குருக்கள்***

நல்லருள் நயமுடன் நல்கும் விநாயகரின் பாத கமலம் பரவி அன்னத்தை வென்ற மென்னடை யழகுடைய அன்னை கருமாரியின் திருவருளினால் நூதன பரிபார மூர்த்திகள் மஹா கும்பாபிஷேக விழாவின் மண்டலாபிஷேக பூர்த்தி தினமான இன்று நறுமணமும் சிவமணமும் கமழும் சிறு மலராய் இந்த கும்பாபிஷேக மலரை உங்கள் கரங்களிலே தருகின்றோம். ஆன்மீகம் அனைவர் இதயங்களிலும் ஆழமாய் படரவும் தெய்வத் திருத்தொண்டுதனை எல்லோரும் ஏற்று செயல்படவும் தீராத துயர் கொண்டு மனத்தாங்களுடன் வாழும் அனைவர் இதயத்தையும் விழிப் படையச்செய்யும் மலராக மலர வேண்டும். நல்லனவற்றை நுகர்ந்து அல்லனவற்றை மறந்து இந்த மலரை ஏற்பது கற்றோரினதும் மற்றோரினதும் மாண்பாகும். எல்லோருக்கும் மங்கள வாழ்வு மலர மாயவன் சோதரியாம் ஸ்ரீ கிருஷ்ணமாரி பாதம் வழுத்தி இச்சிறிய மலரை உங்கள் முன் தருவதில் மகிழ்வடைகின்றேன்.

மலர் ஆசிரியர்
**துன்னையூர் ராம். தேவலோகேஸ்வரக் குருக்கள்**
(க்ஷ. தேவஸ்தான பிரதமகுரு)

*தம்மையே புகழ்ந் திச்சை பேசினுஞ்*
*சார்பினுந் தொண்டர் தருகிலாப்*
*பொய்ம்மை யாளரைப் பாடாதே யெந்தை*
*புகலூர் பாடுமின் புலவீர்காள்*
*இம்மையே தருஞ் சோறுங் கூறையு*
*மேத்தலா மிடர் கெடலுமாம்*
*அம்மையே சிவ லோக மாள்வதற்*
*கியாது மையுற வில்லை.*

*எங்கேனும் இருந்துன் அடியேன் உனை நினைந்தால்*
*அங்கே வந் தென்னோடும் உடனாகி நின்றருளி*
*இங்கேயென் வினையை அறுத்திட்டெனை ஆளுங்*
*கங்கா நாயகனே கழிப்பாலை மேயானே.*

# நுழைவாயில்....

*- மலர் ஆசிரியர்*

மங்கள இயற்கை எழில் எல்லாம் செழித்து ஒருங்கே சேர்ந்து வியாபித்திருக்க அவற்றை எல்லாம் தன்னகத்தே கொண்டு கம்பீரக் காட்சிதரும் ஸ்ரீமத் லங்காபுரியிலே தலை நகராய் விளங்குகின்ற கொழும்பு மாநகரிலே சைவமும் செந்தமிழும் வளர வேண்டும் என அவா கொண்டு ஆங்காங்கே ஆலயங்களும் யாத்திரிகர் மடங்களும் அமைத்து ஆன்மீக தொண்டு புரியும் அன்பர் கூட்டம் தலைநகர் கொழும்பில் சைவ சமயத்தை ஆல விருக்ஷமாக படர விட்டுக் கொண்டு இருப்பது யாரும் மறுப்பதற்கில்லை. அந்த வகையிலே அன்னை கருமாரி அம்பிகை மேல் அபார பக்திகொண்ட ஆன்மீக இளைஞர் திரு. செல்வகுமார் J.P. அன்னைக்கு ஓர் ஆலயம் அமைக்க வேண்டும் என மனதிலே திடசங்கற்பம் பூண்டார். திருவேற்காடு கருமாரி அம்மன் ஆலயத்திற்கு வருடா வருடம் செல்லும் இவர் தனது எண்ணத்தை “திருவளச்சீட்டு” மூலம் அம்பிகையிடம் கேட்டு ஆலயம் கட்ட உத்தரவும் பெற்றார். ஆலயம் அமைப்பதற்கு நிலவசதி இவரிடம் இல்லை மனதில் வேதனையுடன் இருந்தவேளை காஞ்சிப்பெரியவாள் திருவாக்கின்படி அவரது வியாபார ஸ்தாபன கட்டிட தொகுதியான “அஸ்ரல்” எனும் நாமம் கொண்ட கட்டிட தொகுதியின் 9வது தளத்திலே நவசக்தி நாயகியான அன்னை கருமாரி அம்மனுக்கு ஆலய அடிக்கல் விழா சிறப்பாக நடந்தேறியது. நாளொரு மேனியாக ஆலயத்திருப்பணி வேலைகள் சிறப்பாக நடந்தேறியது. அவ்வேளை செல்வக்குமார் அவர்கள் சபரிமலை யாத்திரை மேற்கொண்டு போவதற்கு மாலை அணிந்திருந்தார். அந்த சமயம் ஐயப்பனுக்கும் ஓர் ஆலயம் அமைக்க வேண்டும் என மனதிலே எண்ணம் கொண்டு காஞ்சிப்பெரியவாள் அனுமதியோடு அம்பாளின் வலது புறத்திலே 18 படிகளுடன் கூடிய சபரிமலையை ஒத்த அமைப்புக் கொண்ட ஸ்ரீ தர்மசாஸ்த்தா ஆலயம் அமைப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு ஆலய பணிகள் யாவும் இனிதே நிறைவு பெற்றது. விநாயகர், முருகன், சிம்மபலிபீடம், பைரவர், சண்டேஸ்வரர் என பரிபார மூர்த்திகள் சூழ கருவறையிலே கருமாரி அம்மனும் அப்பாள் வலது புறத்திலே 18 படிகளுடன் கூடிய தர்மசாஸ்த்தா ஆலயமும் காண்போரை கவரும் வண்ணம் அமைக்கப் பெற்று 03.12.1993 வெள்ளிக்கிழமை புனர்பூச நக்ஷதிரத்திலே மஹாகும்பாபிஷேக விழா இனிது நிறைவெய்தியது. அன்றிலிருந்து ஆலய வளர்ச்சி நாளொரு பொழுதாய் வளர்ந்த வண்ணம் இருந்தது. அவ்வேளை வருடா வருடம் நடைபெறும் கும்பாபிஷேக தினத்திலே நடைபெறும் ரதபவனி விழாவிற்கு வாடைக்கு தேர் பெற்று விழாவை இரண்டு வருடம் நடாத்தினார்கள். வாடகை தேரிலே அம்பாள் பவனி வருவது அடியார்களுக்கும் ஆலய அறங்காவலருக்கும் மனச்சஞ்சலத்தை ஏற்படுத்தியது. அம்பாளுக்கென புதிய சித்திரத்தேர் அமைக்க வேண்டும் என அறங்காவலர் செல்வகுமார் எண்ணம் கொண்டார். அவருடைய எண்ணத்திற்கு ஊன்று கோலாய் வரும் அடியார் கூட்டமும் திருப்பணியில் பங்கேற்று எந்த ஆலயத்திலேயும் இல்லாத பெருமையாக கும்பாபிஷேகம் முடிந்த மூன்றாண்டிலேயே அம்பாளுக்கென புதிய சித்திரத்தேர் உருவாகி முதலாவது ரதோற்சவ வெள்ளோட்டம் முறையே 09.12.95லும் 10.12.95லும் சிறப்பாக நடந்தேறியது. இப்படியாக ஆலயத்திலே திருப்பணிகள் ஒவ்வொன்றாக நிறைவு பெறும் வேளையிலே ஆலயத்திலே கிரஹ மாற்றங்கள் நடைபெறும் பொழுது அம்பாளுக்கு விஷேட அபிஷேகம் பூஜைகள் சிறப்பாக நடைபெற்று வந்தன. அடியார்களின் விருப்பப்படி நவகிரஹம் பிரதிஸ்டை செய்ய எண்ணம் கொண்டார்கள் அதே நேரம் பத்மாவதி சமேத வெங்கடாசலபதி, ஆஞ்சநேயர், நூதன வசந்த மண்டபம் ஐயப்ப காவல் தெய்வமான கருப்பண், கருத்தசாமி என்னை பரிபார மூர்த்திகளாக தனித்தனி ஆலயங்களாக அழகாக கட்டப்பட்டு கம்பீரகாட்சி தந்து அனைவரையும் கவர்ந்திழுத்தது. நவகிரஹ பிரதிஸ்டைக்கு எண்ணம் கொண்டு பின் இத்தனை ஆலயங்களும் சிறப்பாக கட்டியது அன்னை கருமாரியின் திருவருள் மகிமை என்பது அனைவரும் உணர்ந்த உண்மை.

22. 03. 96 வெள்ளிக்கிழமை பரிபார மூர்த்திகளின் நூதன பிரதிஸ்டா கும்பாபிஷேக விழா இனிதே நினைவேறியது. ஆலயம் இருந்த தோற்றத்தை விட இன்னும் ஒரு மடங்கு மேலாக சிறப்பாக காட்சி தந்து மெருகூட்டுகின்றது. ஆலயத்திலே ஒவ்வொரு வெள்ளி செவ்வாய் கிழமைகளில் ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமம், ராகுகால துர்க்கா பூஜை சனிக்கிழமைகளில் ஐயப்ப படிப் பூஜை பஜனை ஞாயிறு கிழமைகளில் வேங்கடேசர் சகஸ்ரநாமம், சனிக்கிழமைகளில் நவகிரஹ அபிஷேகம் வியாழகிழமைகளில் ஆஞ்சநேய சகஸ்ரநாமம் என்பன சிறப்பாக நடைபெறும் இவற்றுக்கெல்லாம் மெருகூட்டும் வண்ணம் ஒவ்வொரு பௌர்ணமியும் நடைபெறும் திருவிளக்கு பூஜையின் சிறப்பு எழுத்தில் வடிக்க முடியாததாகும். இலங்கையிலேயே முதன் முதலாக கட்டிடத் தொகுதி ஒன்றிலே கட்டப்பட்ட கோவில் என்ற பெருமை இந்த ஆலயத்திற்குத்தான் உண்டு.

கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாய் அனைவரையும் காத்து ரக்ஷிக்கும் அன்னை கருமாரி நவசக்தியானவள் நவதளப்பதியிலே திருக்கோவில் கொண்டு அனைவரையும் ரக்ஷிக்கின்றாள்.

*தரும நெறி தழைத்தோங்க தரணிக்கு*
*அருள் சுரக்க*
*பருவ முகிழ் தவறாது பொழிய பாரினில்*
*வரம் கொடுக்க*
*அருவ உருவமாய் "அஸ்ரல்" நவதளப்பதி*
*மேவியருளும்*
*கருமாரித் தாயே நின் திருப்பாத கமலம்*
*சரணமம்மா.*

என அம்பிகையின் பாத கமலங்களை வழுத்தி சரணடைவோமாக!

**"சுப மங்களானி பவந்து"**

நெஞ்சுக்கு நீதியும் தோளுக்கு வாளும்
நிறைந்த சுடர் மணிப்பூண்
பஞ்சுக்குநேர் பல துன்பங்களாம் இவள்
பார்வைக்கு நேர் பொருந்தி
வஞ்சனையின்றிப் பகையின்றிச் சூதின்றி
வையக மாந்தரெல்லாம்
தஞ்சமென்றே யுரைப்பீர் அவள் சக்தி
ஓம் சக்தி. ஓம் சக்தி. ஓம் சக்தி.

❄ ❄ ❄ ❄

கற்பூர நாயகியே கனகவல்லி
காளி மகமாயி கருமாரியம்மா
பொற்கோவில் கொண்டசிவ கருமாரியம்மா
பூவிருந்த வல்லிதெய்வ யானையம்மா
விற்கோல வேதவல்லி விசாலாட்சி
விழிக்கோல மாமதுரை மீனாட்சி
பொற் கோவில் தானமைத்தேன் இங்குதாயே
சுடராக வாழ்விப்பாய் என்னை நீயே

உ

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம :

# ஸ்ரீமுகம்

***- ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகள் அவர்கள்***

பக்தானுக்கிரஹ பரனான பரமேஸ்வரன் அதற்காக ஏற்றுக்கொண்டுள்ள பலப்பல மூர்த்தங்களுள் கலியுக வரதர்களாகக் காட்சியளித்து வரும் ஸ்ரீதேவி கருமாரி அம்மன் ஸ்ரீ ஐயப்ப சுவாமி ஆகிய மூர்த்திகளின் மூலமாக கொழும்பு நகரில் "அஸ்ரல்" வளாகத்தில் 9வது தளத்தில் கோவில் கொண்டு அருள் பாலித்து வருவதோடு ஸ்ரீ பத்மாவதி ஸமேதவேங்கடேசர், கால ஸ்ரூபத்தின் பிரதிகளாகும் நவகிரஹங்கள், ஸ்ரீ ராமபக்த பிரம்மசாரியாக விளங்கும் ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆகிய மூர்தங்களுடன் நூதன வசந்த மண்டபம் என்பன நிர்மானித்து 22. 03. 96 அன்று நடைபெற்று முடிந்துள்ள கும்பாபிஷேகத்தையொட்டி மலரொன்று வெளியிடவிருப்பது அறிந்து மகிழ்கின்றோம்.

எக்கோலம் கொண்டாலும் எந்நிலையில் நின்றாலும் பக்தர்களுக்கு பரமன் அருளிடவே செய்கின்றான் என்ற அடியார்களின் அனுபவ பூர்வமான உண்மையை விள்க்கி மலர் ஆதித்யம் தழைக்க வைப்பதாக விளங்க எங்கும் வியாபித்து அருள் பாலித்து வரும் ஸ்ரீ பரமேஸ்வரன் அருள் பாலிக்க ஆசீர்வதிக்கின்றோம்.

*"நாராயணஸ்ம்ருதி"*

ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்ய பரம்பராகத
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு
**ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகள் அவர்கள்**
ஸ்ரீமடம் ஸம்ஸ்தானம்
நெ. 1, சாலைதெரு, காஞ்சிபுரம் - 631502

# கொள்ளுப்பிட்டி அருள்மிகு கருமாரி அம்மன் கோவிலில் பத்மாவதி தாயார் சந்நிதி

*நயினை சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள்*

கொள்ளுப்பிட்டி அருள் மிகு கருமாரி அம்மன் கோவிலில் பத்மாவதி தாயாருடன் வெங்கடேசப் பெருமானும் ஆஞ்ஜநேயப் பெருமான், நவக்கிரகம் ஆகிய மூர்த்திகள் ஸ்தாபிக்கப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது சிறப்பானதாகும். இந்தியாவில் திருப்பதியில் மட்டுமே பத்மாவதி தாயார் சந்நதி உண்டு. இலங்கையில் ஸ்ரீ கருமாரி அம்பாள் கோவிலில் பத்மாவதி தாயாருக்கும் வெங்கடேசப் பெருமானுக்கும் சந்நிதி அமைந்தது சிறப்பும் பாக்கியமும் ஆகும். பக்தர்கள் சென்று வழிபட்டு அன்னை அருள் பெற்று பேறடைவார்களாக! கும்பாபிஷேக மலர் சிறப்புடையதாகவும் வாசகர்கள் வாசித்து மகிழவும் அன்னை ஸ்ரீ கருமாரி அம்பாள் பாத மலர் பணிந்து அனைவரும் அன்னை அருள் பெற்று வாழ்க என வாழ்த்துவோம்.

"பிரதிஷ்டா புஷணம் சிவாகமஞானபானு"
பிரதிஷ்டா கலாநிதி
வேதாகமக் கிரியா சூடாமணி
சிவாசார்ய சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள்
ஆதீன குரு
ஸ்ரீ நாகபூஷனி அம்பாள் தேவஸ்தானம்
நயினாதீவு

# ஆசியுரை

***- ஸ்ரீ. விஸ்வ நாராயணசர்மா அவர்களின்***

எங்கும் வியாபித்து இன்னருள் புரியும் சக்தியானவள் பக்தாணுக்கிரஹ தாரணியாய் வேண்டும் வரமதை சாலப்பரிந்து லோகமாதாவாய் விளங்குகின்றாள். அந்த வகையிலே தலைநகரில் கொள்ளுப்பிட்டியில் "அஸ்ரல்" நாமம் கொண்ட கட்டிட தொகுதியின் நவதளப்பதியில் கருணைதரு கருமாரியாய் கருவறை வீற்றிருந்து இன்னருள் புரிவது யாவரும் அறிந்ததே. மிகக் குறிகிய காலத்தில் பாரிய வளர்ச்சியை இவ்வாலயம் கண்டிருப்பது அன்னையின் திருவருள் என்றே கூறவேண்டும். 22. 03. 96 அன்று ஆலயத்தில் நூதன பரிபார மூர்த்திகள் கும்பாபிஷேக விழா இனிதே நிறைவெய்தியது. மண்டல பூர்த்தியன்று ஆன்மீகம் மிளிரும் "கும்பாபிஷேக மலர்" என்றமலர் வெள்யிடுவது அறிந்து மகிழ்கின்றோம். ஆழியாய் படர்ந்து இருக்கும் எமது இந்துமத தத்துவங்கள். இப்படியான ஆன்மீக மலர் மூலம் அனைவரும் அறியச் செய்வது சிறப்பாகும். மலர் வெளியிடும் அனைவருக்கும் அன்னை கருமாரி அருள் கிடைப்பதாக அனைவருக்கும் பயன்படும் அற்புத மலராக "கும்பாபிஷேக மலர்" வெளிவர தெல்லிநகர் பதியுறை திரிபுரசுந்தரியாம் துர்க்கையின் பாதம் வழுத்தி எமது நல்லாசிகளை வழங்குகின்றோம்.

*"சுப மங்களானி பவந்து"*

தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கா வேதாகம
குருகுல உபாத்தியார்
"வேதாகம வித்யா பூஷணம்"
**ஸ்ரீ. விஸ்வ நாரயண சர்மா**
(கும்பாபிஷேக சர்வசாதகர்)

# வாழ்த்துரை

***S. செல்வக்குமார் J.P அவர்கள்***

*"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் - அன்புடையார்*
*என்பும் உரியர் பிறர்க்கு"*

இது வள்ளுவப் பெருந்தகையின் திருக்குறளாகும். தமக்கென வாழா பெருந் தன்மையோடு பிறர்க்கென வாழ்வது சிறப்பு ஒவ்வொரு மனிதனும் தன்னாலான உதவி பிறர்க்கும் செய்தால்தான் மனிதப்பிறவியின் பூரணத்துதத்தை அடையலாம். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற கூற் றின்படி என்னாலான சிறிய ஆன் மீக தொண்டாக இந்த ஆலயத்தை அமைத்து ஆன்மீக அடியார்களின் அபிலாசை களை நிறைவேற்ற கருமாரி எனை பணித்தாள் போலும் வெள்ளமென வந்து அம்பிகை முன் தம் குறை கூறி அருள்பெற்று செல்லும் அடியார் கூட்டத்தை காணும் போது மனம் மகிழ்வெய்கிறது ஆலயம் அடியார்களின் ஒத்துழைப்போடு பொழிவுபெற்று திகழ்கின்றது. இந்நேரத்தில் "கும்பாபிஷேகமலர்" என்ற ஆன்மீக மலர் வெளிவருவது போற்றுதற்குரியது அனைவரையும் மகிழ் விக்கும் வாடாமல ராக மலர என் அன்னை கருமாரியையும், ஐயன் தர்மசாஸ்த்தாவையும், வணங்கி மலரை வாழ்த்துவதில் மகிழ்வெய்கின்றேன்.

நன்றி.

ஆலய நிர்வாகி
S. செல்வக் குமார் J. P.

# மலரில் மலர்ந்திருப்பன...............


| | | |
|---|---|---|
| 01. | மலரும் மணமும் – மலர் ஆசிரியர் | (iv) |
| 02. | நுழைவாயில் – மலர் ஆசிரியர் | (v) - (vi) |
| 03. | ஸ்ரீ முகம் – காஞ்சிப்பெரியவாள் | (vii) |
| 04. | ஆசியுரை – "பிரதிஸ்டாகுரு "சுவாமிநாத பரமேஸ்வரக்குருக்கள்" | (viii) |
| 05. | ஆசியுரை – சர்வசாதகர் "ஸ்ரீ விஸ்வ நாராயண சர்மா" | (ix) |
| 06. | ஆசியுரை – ஆலய நிர்வாகி S. செல்வக்குமார் J. P. | (x) |
| 07. | மலரில் மலர்ந்திருப்பன........... | (xi) |
| 08. | "யாதுமாகி நின்றாய்" – திருமதி சந்தனா நல்லலிங்கம் M.A. | 01 - 04 |
| 09. | ஆலய தத்துவ விளக்கம் – அச்சுவேலி சிவஸ்ரீ குமாரசாமி குருக்கள் | 05 - 13 |
| 10. | கும்பாபிஷேக தத்துவம் – ஸ்ரீ விஸ்வ நாராயண சர்மா | 14 - 15 |
| 11. | திருவிளக்கு பூஜையும் வழிபாடும் – மலர் ஆசிரியர் | 16 - 17 |
| 12. | கருமாரி அம்மன் ஊஞ்சற் பாமாலை – மலர் ஆசிரியர் | 18 - 20 |
| 13. | மெய்பொருள் தரும் ஸ்ரீ ஐயப்ப சுவாமி – மலர் ஆசிரியர் | 21 |
| 14. | ஸ்ரீ அஷ்ட லக்ஷ்மி வழிபாடு – சுவாமிநாத பரமேஸ்வரக்குருக்கள் | 22 - 23 |
| 15. | ஸ்ரீ தேவி கருமாரி அம்மன் ஸ்ரீ ஐயப்பன் திருக்கோவில் அறங்காவலர்கள் | 24 |
| 16. | ஆலயத்தில் நடைபெறும் வருட விழாநிகழ்வு | 25 - 28 |
| 17. | என்றும் இனிய நன்றியுடையோர் | 29 |

*With Best Compliments From:*

# Lalitha Jewellery Mart Ltd.


105, Sea Steet, Colombo 11, Sri Lanka.
Tel : 323691, 431993, Fax : 436343
442, R. A. De Mel Mawatha, Colombo 3.
Tel : 577451 - 2, Fax : 577454



**03.12.1993** அன்று கும்பாபிஷேக கிரியை தொடங்கு முன் மாண்புமிகு அமைச்சர் செல்லச்சாமி மங்கள விளக்கேற்றுவதும், அருகில் திருமதி செல்வரட்ணம் அறங்காவலர் செல்வக்குமார்.



**03. 12. 1993** மஹா கும்பாபிஷேகம் தூபி அபிஷேகம் நடைபெற பிரதம சிவாச்சாரியார் சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் ஆயுத்தமாகும் காட்ச்சி.




**02. 12. 1993** அன்று
புதிய விக்கிரங்கள் கிராமபிரதட்சணம் நடைபெறும் காட்சி

ஓ

# "யாதுமாகி நின்றாய்"

- *திருமதி சந்தனா நல்லலிங்கம் (M.A)*

வைதீக சமயங்களுள் சக்தியை முழு முதல் தெய்வமாக வழிபடும் சமயம் சாக்தம் எனப் பெயர் பெறுகிறது. இற்றைக்குக் கி.மு (3000) மூவாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்ததாகக் கருதப்படும் சிந்துவெளி நாகரிக காலத்தில் பெண் தெய்வ வணக்கம் நிலவியதென்பதை அகழ்வாராய்ச்சிச் சான்றுகள் நிரூபிக்கின்றன.

சங்க காலத்தில் தமிழ் நாட்டிற் பெண் தெய்வ வழிபாடு பெருமளவிற் பரவியிருந்தமைக் குச் சான்றுகளில்லை. பாலை நில மக்கள் ஆறலைத்தல், சூறையாடுதல் ஆகியவற்றைப் புரிய இத் தெய்வதைக் கொற்றவை என்ற பெயரில் வழிபட்டனர் எனக் குறிப்புகள் காணப்படுகின் றன. இதனை அடுத்த சங்கமருவிய காலப்பகுதில் தோண்றிய பெருங்காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரத்தின் 'வேட்டுவ வரி' கொற்றவை வணக்கம் வளர்ச்சியடைந்த நிலையைச் சிறப் பாகக் காட்டுகிறது. எல்லாம் வல்ல பராசக்தியை மகிடாசுரமர்த்தினியாகச் சித்திரிக்கின்றது வேட்டுவ வரி,

*"ஆனைத் தோல் போர்த்துப் புலியின் உரியுடுத்துக்*
*கானத் தெருமைக் கருத்தலைமேல் நின்றாயால்*
*வானோர் வணங்க மறைமேல் மறை யாகி*
*ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றியே நின்பாய்;*

*வரி வளைக் கை வாளேந்தி மாமயிடற் செற்றுக்*
*கரியதிரி கோட்டுக் கலைமிசை மேல் நின்றாயால்*
*அரியரன் பூ மேலோன் அக மலர்மேல் மன்னும்*
*விரிகதிரன் சோதி விளக்காகி யேநிற்பாய்;"*

**- *சிலப்பதிகாரம் பக் 278***

எனப்பாடல்கள் தொடருகின்றன. அம்பிகை யானையுரி போர்த்துப் புலி உரிவை உடுத்துக் காட்டெருமைத் தோற்றமுள்ள மகிடன் மேல் நின்ற நிலையில், மறைக்குமேல் மறையாக, அறிவுக் கொழுந்தாய்த் தோன்றுதலின் வானோர்கள் வணங்குகின்றனர்.

அடுத்து, வாளேந்திய வளையணிந்த கை தனையுடையாளாய் மகிடனைவென்று, கலைமானில் ஏறி அமர்ந்து, அரி, அரன் அயன் ஆகியோரது உள்ளத் தாமரையில் வீற்றிருந்து, கதிர்ச் சோதி விளக்காகப் பிரகாசிக்கின்றாள். வேட்டுவர்குலப் பெண்ணொருத்தியையே கொற்றவையாக ஒப்பனை செய்துள்ளார்கள். அமரி, குமரி, கவுரி, சமரி, சூலி, நீலி, மாலவற்கு இளங்கிளை, ஐயை செய்யவள், வெய்யவள், பாய்கலைப்பாவை, பைந்தொடிப்பாவை, ஆய்கலைப்பாவை, அருங்கலைப்பாவை என்ற பெயர்களால் கொற்றவையைப் போற்றி வழிபடுகின்றனர். ஆனால் இன்று கொற்றவை என்ற தெய்வம் வணக்க முறையில் இல்லை. அன்றைய வணக்க முறைக்கும், இன்றைய வழிபாட்டு முறைக்கும் இடையே வேறுபாடுகள் பல உள. மகிஷாசுரமர்த்தினியாகத் 'துர்க்கை' போற்றப்படுகின்றாள்.

அன்னை பராசக்தி அகிலத்தை ஆண்டு நடத்துபவள். அம்பாளின் அருட் செயல்களை எல்லாம் எம்மால் எடுத்தியம்ப முடியாது. சில வற்றை ஈண்டு தருவாம். ஒரு சமயம் பிருங்கி முனிவர் சிவபெருமானை வழிபடக் கருதி அவரை மும்முறை வலம் வர நினைத்தார். மருங்கினிலே உமாதேவியாரைக் கண்டதும், பெண்ணை ஏன் வலம் வர வேண்டும் என்ற இறுமாப்பு மேலோங்க அன்னையைத் தவிர்த்துச் சிவபெருமானை மாத்திரம் வலம் வந்தார். இச்செயலால் வெகுண்ட அம்பாள் பிருங்கி முனிவருடைய சக்தி யாவும் அற்றுப் போகும்படி சபித்தனள். பின்னர் அம்பிகை திருக்கேதாரம் என்ற தலத்தில் இருபத்தொரு நாட்கள் இறைவனை நோக்கி விரதமிருந்து இறைவனிற் பிரிவுபடாது வாமபாகம் பெற்றனள். இந்நாட்களிற் சுமங்கலிப் பெண்களும் விரதமிருந்து இட்ட சித்திகளைப் பெற்றுக் கொள்வர். இதனையே கௌரி விரதமென்பர்.

மகா கவி காளிதாசன் வடமொழிப் புலமை வாய்ந்தவர் படிப்பறிவு இல்லாதவனாய், ஆடு மேய்ப்பவனாய் இளமையைக் கழித்த இவர். ஆடுகளை மேயவிட்டுக் காட்டின் மத்தியில்

இருந்த காளிகோயில் மண்டபத்திற் தூங்கி எழுவார். இச்சந்தர்ப்பத்தில் இவருக்குக் காளி யின் அருட் கடாட்சம் கிடைத்தது. கவிபாடும் ஆற்றல் பெற்று அரச சபையிற் கற்றறிந்த புலவர் களை வாதிலே வென்றார். அரச குமாரியை மணம் புரிந்தார். சாகுந்தலம், மேக தூதம், குமார சம்பவம் ஆகிய சிறந்த காவியங்களைப் பாடினார். காளியே இவரை வழிநடத்தினாள். காளியின் சொல்லை இவர் தட்டியதாலேயே, இறுதியிற் கொலை செய்யப்பட்டார். அம்பிகையைக் காளி தாசன் பாலாஸ்துதியில் சுலோகங்களாற் துதித் துள்ளார். அவற்றுள் ஒரு சுலோகத்தை இங்கு தருவாம்

*"அயீ! ஆனந்தவல்லி! அம்ருதகரதலி!*
*ஆதி சக்தி பராயி*
*மாயா, மாயஸ்வரூபி ஸ்படிகமணிமயீ*
*மாமதங்கி ஷாடங்கி*
*ஞானா ஞானஸ்வரூபி நளின பரிமளி*
*நாத ஓம்கார ரூபி*
*யோகி யோகாஸனஸ்தா புவனவசகரி*
*சௌந்தரி ஐம் நமஸ்தே"*
*என்கிறது சுலோகம்*

அன்னையே! ஆனந்தமயமானவளே, அமிர் தத்தைக் கரத்திற் தாங்கியவளே, பழமை வாய்ந் தவளே, உயிர்களில் நிறைந்திருப்பவளே, மாய வடிவானவளே, பளிங்கு நிற மணி போன்றவளே, மாதங்கி எனப் பெயருடையவளே, கல்யாண குணமானவளே, அறிவுருபமானவளே, கமல மலரின் வாசனையுடையவளே ஓம்கார நாதத்தின் ரூபமானவளே, யோகநிலையிலிருப்ப வளே, அகிலத்தை வசீகரிப்பவளே, அழகுடை யவளே உன்னை நான் வணங்குகின்றேன் எனக் கூறிப் போற்றுகிறார் காளிதாசன்.

கவிச்சக்கரவர்த்தி என அழைக்கப்பட்ட கம்பர் செய்ததென்ன? அவர் சரஸ்வதி உபாச கராக விளங்கினார் என்பதைப் பலர் அறியார். இராமாயணம் என்ற காவியத்தைத் தமிழிற் பாடினார் கம்பர். இந்நூலின் சிறப்புப் பாயிரத்தில் 'கமுந்தராய்' எனத் தொடங்கும் பாடலில்

*"விழுந்த ஞாயிறு எழுவதன் முன் முறை வேதியருட னாராய்ந்து*
*எழுந்த ஞாயிறு விழுவதன் முன் கவி பாடினன் எழுநூறே"*

எனக் கூறப்படுகிறது. கம்பர் வால்மீகி வட மொழியில் எழுதிய இராமாயணத்தை வடமொழி நன்கறிந்த பிராமணரோடு, சூரியன் மறைந்தபின் இராப் பொழுது முழுவதும் ஆராய்ந்திருக்கின் றார். 'எழுந்த ஞாயிறு விழுவதன் முன்' அதாவது காலை முதல் மாலை வரை எழுநூறு பாடல்க ளாகத் தினமும் பாடி இராமாயணத்தை முற்று வித்துள்ளார். சரஸ்வதியின் கடாட்சமின்றேல் இங்ஙனம் பாட முடியாது. பின் இரவில் சரஸ்வதி இவரிடம் 'விடிந்தது கம்பா' எனக் கூற, இவர் 'முடிந்தது அம்பா' எனக் கூறிச் சிறிது உறங்கு வார் எனக் கூறப்படுகிறது. அம்பிகையின் அருட் செயலாலேதான் கம்பர் இராமாயணம் பாடினார் எனின் மிகையில்லை.

கி.பி 17ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த குமரகுருபரசுவாமிகள் பற்றிப் பலர் அறிந் திருக்கலாம். ஸ்ரீ வைகுண்டத்தில் அவதரித்து ஐந்து வயது வரை ஊமையாக இருந்த இவருக் குத் திருச் செந்தூர் முருகன் சந்நிதியில் பேச்சுப் பிறந்தது. முருகப் பெருமான் மீது கந்தர் கலி வெண்பா பாடி அருள் பெற்றார். மீனாட்சியம்மை மீது பக்தி மீதூரப் பெற்று மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் என்ற பிரபந்தத்தைப் பாடினார். அம்பிகையைக் குழந்தை வளர்வதாகக் கற்பனை செய்து பருவங்கள் அமைத்துப் பாடுதல் பெண்பாற் பிள்ளைத் தமிழினுள் அடங்கும்.

நூலை அரங்கேற்றுகின்றார். அன்னை மீனாட்சி நடைபயிலும் 'வருகைப் பருவப்' பாட லான "தொழுக்கும் கடவுட் பழம் பாடல்" என்ற பாடலைப் பாடுகின்றார். பாடலுக்கு உருகிய அன்னை மீனாட்சி, அர்ச்சகரின் குழந்தை வடி விலே அவ்விடத்துத் தோன்றி முத்துமாலை ஒன்றைக் குமரகுருபரர் கழுத்திலிட்டு மறை கிறாள். அம்மை பாட்டைச் செவிமடுத்தாள், பாட் டுக்கு உருகினாள், பாடலுக்குப் பரிசும் அளித்துச் சென்றாள் எனின் குமரகுருபரருடைய பக்தி யின் உயர்வையும் பாடலின் பொருட் செறிவை யும் பற்றி நாம் கூற வேண்டியதில்லை.

நவராத்திரி நாட்களில் நாம் பாடும் சகல கலாவல்லிமாலையையும் அருளிச் செய்தவர் குமர குருபரரேயாவர். அம்பிகையின் அருள் பெற்றுச் சிங்கத்தின் மீதேறி வடநாடு சென்று, முகலாய மன்னனோடு உரையாடி அவன் உதவி பெற்றுக்

கேதார மந்திர், கேதாரத்துறை, அறச்சாலை என்பன அமைத்தார். ஹிந்தி மொழியில் உரையாடும் ஆற்றலை அம்பிகையே இவருக்களித்தாள் எனக்கூறலாம்.

சோழநாட்டிலே திருக் கடவூர் என்ற தலமொன்றுண்டு. வீரட்டான தலங்களில் ஒன்றான இத்தலத்திலேதான் இறைவன் மார்க்கண்டேயருக்காக இயமனைக் காலால் உதைத்தார். இற்றைக்கு 250 வருடங்களுக்கு முன் இவ்வூரில் வாழ்ந்த அபிராமிப்பட்டர் என்பவர் அன்னை அபிராமி மீது அதீத பக்தி கொண்டிருந்தார். லலிதாம்பிகையின் திருவருள் இன்பத் திற்றிளைத்துப் பித்தரைப் போல் உலாவினார். ஒரு சமயம் மகாராஷ்டிர மன்னன் சரபோஜி அபிராமி அம்மையின் திருக்கோயிலிற் பட்டரைக்கண்டு அவரோடு பேச விரும்பி, அன்று தை அமாவாசையாகையால், அமாவாசை எவ்வளவு நாழிகை உண்டென வினவினான். சந்திர மண்டலத்தின் நடுவே அமுதமாய் விளங்கும் அம்பிகையின் சுடர்கின்ற திருக் கோலத்திலே ஈடுபட்டிருந்த பட்டர் இன்று பௌர்ணமி என விடைப் பகர்ந்தார். அரசன் உண்மையில் பட்டர் ஒரு பித்தர் என நினைத்து அவரை மதியாது சென்றனன்.

உலக உணர்ச்சி பெற்றபட்டர் தவறுதலாக மன்னனுக்குப் பௌர்ணமி எனக் கூறியதை நினைத்து வருத்தமுற்றார். இப்பிழையின் நின்றும் அபிராம வல்லியே தம்மைக் காப்பாற்ற வேண்டும் என எண்ணி 'அரிகண்டம்' பாட முற்பட்டார். அம்பிகையின் சன்னிதி முன்றிலில் குழி ஒன்று வெட்டி அதனுள் அக்கினி மூட்டி மேலுள்ள விட்டத்தில் நூறு கயிறுகள் பூட்டப்பட்ட பலகையின் மீதேறி, அம்பிகை காட்சி தந்து பழிமாற்றா விட்டால் அக்கினியுள் வீழ்ந்து உயிர்விடுவதாகச் சங்கற்பம் செய்தார். "உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகமுணர்வுடையோர்" என அடி எடுத்துப் பாடத் தொடங்கினார். ஒவ்வொரு பாடல் முடிவிலும் ஒவ்வொரு கயிறு அரியப்பட்டது. எழுபத்தொன்பதாவது பாடலில் அதாவது "விழிக்கே அருளுண்டு" எனத் தொடங்கிப் பாடும் போது மாலைக்காலமுமானது. அம்பிகை பட்டருக்குத் திரு உளம் இரங்கித் தோடொன்றைக் கழற்றி வான் மண்டலத்திலே வீசி எறிய, அது சந்திரனாகச் சுடர் விடலாயிற்று. அம்பிகை பட்டரை நோக்கி "அன்பா நீ மன்னனிடம் கூறியதை நாம் மெய்ப்பித்தோம். இப்பிரபந்தத்தை நிறைவேற்றுவாயாக இதனைப் பக்தியுடன் ஓதுபவர்கள் நம் அருள் பெறுவர்" எனக் கூறி மறைந்தாள்.

திருக்காட்சியாற் பேரின்பவாரிதியில் திளைத்த பட்டர் அந்த ஆனந்த அதிசயத்தைக் "காட்டியவா என்னை" என எண்பதாவது பாடலிற் புலப்படுத்துகிறார். இப்பிரபந்தமே இன்று நாமெல்லோரும் பாடி ஏத்தும் அபிராமி அந்தாதி யாகும்.

அன்று இரவு பூரணச் சந்திரன் ஒளி விடுவதைச் சரபோஜியும் ஏனையோரும் கண்டு அற்புதம் என அதிசயமுற்றனர். பட்டரின் பக்தியையும் அன்னையின் அருளையும் வியந்தனர். மன்னன் பட்டரை அணுகிப் பிழை பொறுக்க வேண்டினான். நூலில் ஆசிரியப்பா பதிகமாக அமைந்துள்ளது.

கலையாத கல்வி எனத் தொடங்கும் பாடலில் தடையற்ற முழுமையான கல்வி, நீண்ட வாழ்நாள், கபடற்ற நட்பு, வளமான வாழ்வு, குன்றாத இளமை, நோயற்ற உடல், சலியாத மனம், அன்பு அகலாத கணவன், மனைவி புத்திரப்பேறு, குறையாத புகழ், தவறாத வார்த்தை, தடை ஏற்படாத கொடை, குறையாத நிதி, செங்கோல் ஆட்சி, துன்பமற்ற வாழ்வு, உன்பாதத்து அன்பு இத்தனையும் எனக்கு அருள வேண்டும் என அபிராமி பட்டர் கேட்கிறார்.

அபிராமிப் பட்டர் சக்தி உபாசகர் பற்றற்ற வாழ்வு வாழ்ந்த சந்நியாசி இவர் தமக்காக இவையெல்லாவற்றையும் கேட்கின்றாரா? இல்லை சுத்தமனத்தினராய் அன்னையை வழிபடும் உத்தம பக்தர்கட்கு இவற்றை அன்னை அளிக்க வேண்டும் எனக் கேட்கின்றார்.

கல்கத்தாவைப் பிறப்பிடமாகக் கொண்ட இராமகிருஷ்ணர் 'பவதாரிணி' என்ற காளியை உபாசித்தவர். பவதாரிணியே அவரை இயக்கினாள். "பெண்கள் அனைவரும் சக்தியின் அம்சம் கொண்டவர்கள்; அவர்களில் எவரைக் கண்டாலும் ஓர் அம்மன் கோயிலுக்குள் புகும் பாவத்திலே உன் மனத்தை நிறுத்து" என ஆண்களுக்கு அருள் வாக்குக் கூறினார். மனைவியாகிய சாரதாதேவியாரை அவர் அம்பிகையாகக் கருதி வழிபட்டார். இவர் ஸ்தாபித்த நிறுவனங்கள்

இன்று உலகின் பல பாகங்களிலும் அருட்பணி புரிகின்றன.

இறுதியில் 20ம் நூற்றாண்டில் வாழ்ந்த வரகவி சுப்பிரமணிய பாரதியாரை நோக்குவோம். காளி பக்தனாகக் காளியை எப்படியெல்லாமோ பாடியுள்ளார்.

*"யாது மாகி நின்றாய் – காளி*
*எங்கும் நீ நிறைந்தாய்*
*தீது நன்மை யெல்லாம் – காளி*
*தெய்வ லீலை யன்றோ*

*பூதமைந்து மானாய் – காளி*
*பொறிகளைந்துமானாய்*
*போத மாகி நின்றாய் – காளி*
*பொறியை விஞ்சி நின்றாய்*

*இன்பமாகி விட்டாய் – காளி*
*என்னுளே புகுந்தாய்*
*பின்பு நின்னை யல்லால் – காளி*
*பிறிது நானுமுண்டோ?*

எனப் பாடுகிறார். பிரபஞ்சமெல்லாம் காளியாகக் காண்கிறார் பாரதி. இன்ப நினைவான அம்பிகையின் நினைவு தன்னுள்ளே இருப்பின் 'நான்' என்ற முனைப்புக் கெடுகிறது. இதனால் தெய்வத் தன்மையை அடைவதாகக் கூறுகிறார்.

இங்ஙனம் சக்தியை வழிபட்டு நல்லன புரிந்து நமக்கு நல்வழிகாட்டிய அனுபூதிமான்களையும், கற்றறிந்தோர் செயல்களையும் கூறினோம். கொள்ளுப்பிட்டியிலே ஐயனார் அருகில் வீற்றிருக்கக் கொலு வீற்றிருக்கும் 'கிருஷ்ணமாரி' அம்பாளை வழிபட்டு நாமும் நலன் பெறுவோம்.

வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துயர் இடும்பையில் பிறந்து
கூடினேன் கூடி இளையவர் தம்மொடு
அவர் தரும் கல்வியே கருதி
ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும் பதம் தெரிந்து
நாடினேன் நாடி நான் கண்டு கொண்டேன்
நாராயணா எனும் நாமம்

❄ ❄ ❄ ❄

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

# ஆலய தத்துவ விளக்கம்

*அச்சுவேலி - சிவஸ்ரீ. குமாரசாமி குருக்கள்*

**(ஆலயம் அமைக்கவேண்டிய முறை, அவற்றின் காரணம், ஆலய வழிபாட்டின் இன்றியமையாமை, வழிபாட்டின் விளக்கம் முதலியன இக் கட்டுரையில் விளக்கப்படுகின்றன.)**

நாம் முற்பிறவிகளிலே செய்துகொண்ட தவம் காரணமாக அருமையாகப்பெற்ற மனிதப் பிறவியினால்வரும்பயன், சரியை, கிரியையோகம், ஞானம் என்னும் சிவ புண்ணியங்களைச் செய்து மெய்யன்புடன் சிவபெருமானை வழிபட்டு பரம புருஷார்த்தமாகிய நித்தியானந்த முத்தியை அடைதலேயாம். சிவ பெருமான் எங்கும் வியாபக மாய் இருப்பினும் சிவலிங்கம் முதலிய திருமே னியையும், குருவையும், மெய்யடியார் திருவே டத்தையும் ஆதாரமாகக் கொண்டு நின்றும், அகத்தே உயிரிடமாகக்கொண்டு நின்றும் நாம் செய்யும் வழிபாட்டைக் கொண்டருளுவார். சிவபெருமான் இவ்விடங்களில் தயிரில் வெண் ணெய் போல் விளங்கி நிற்பவர். மற்றைய இடங் களிலெல்லாம் பாலில் வெண்ணெய்போல் வெளிப் படாது நிற்பர். ஆதலினால் நாமெல்லாம் நமது பரமபதியாகிய சிவபெருமானை, குருலிங்க சங்கமம் ஆகிய இடங்களிலே விதிப்படி சிரத்தை யோடு வழிபடுதல் வேண்டும்.

ஆன்மாக்களை முத்தியாகிய கரையில் ஏற்றுங் காரணமாகவே மூர்த்தி, தலம், தீர்த்தம், என்னும் மூன்றுவடிவாய்ச் சிவபெருமான் விளங்குகின்றார். இவற்றை முறையாக வழிபடு வோர் பரமாசாரியரால் உண்மை ஞானம் பெற்று முத்தியடைவர்.

சிவபெருமானுடைய திருவடிகளை நினை யவொட்டாமல் அயர்ப்பிக்கும் மும்மல அழுக்கை ஞானநீரால் கழுவி அயராத அன்பைச்செய்யும் அடியாரோடு கலந்துகூடி மல மயக்கம் நீங்கும்படி அன்பு மிக்குடைய அவரது திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவமெனவே கண்டு வழிபட்டு வாழும் இயல்புடையோரே சீவன் முத்தராவ ரென ஞானசாத்திரங்கள் கூறும் உண்மையாம். ஆலய வழிபாடுசெய்து பெரும் பேறெய்திய மார்க்கண்டேய முனிவர் இதற்குச் சான்றாவர்.

ஆலய வழிபாட்டின் பெருமையை ஆன்மாக் களுக்கு உணர்த்தி அவர்களை நல்வழிப் படுத்து மாறு திருவுளம் கொண்ட உமா தேவியார் காஞ் சீபுரம் முதலிய தலங்களிலும், விநாயகக்கடவுள் திருச் செங்காட்டாங்குடி முதலிய தலங்களிலும் சுப்பிரமணி யக்கடவுள் வேலூர் முதலிய தலங்க ளிலும், ஆலயமமைத்துப் பூசித்தார்கள். திருநந் திதேவர், அகத்திய முனிவர், பிரமா, விட்டுணு , நவக்கிரகங்கள், ஏனைய முனிவர்கள், தேவர்கள், அசுரர்கள், முதலிய பற்பலரும் ஆலய வழிபாடு செய்து போக மோக்ஷங்களைப் பெற்றார்கள். அஃறிணைப் பொருளாகிய சம்பாதி, சடாயு என்னும் பட்சிகளும், சிலந்தி, பாம்பு, யானை, முதலியவைகளும் ஆலய வழிபாட்டால் முத்தி யடைந்தன.

சைவாலயங்களிலே நித்தியபூசை பிரதிட்டை உற்சவம் பிராயச்சித்தம் முதலிய கிரியைகள் சிவபெருமான் ஆன்மாக்கள் பொருட்டு அருளிச் செய்த சிவாகமவிதிப்படியே நடைபெறத்தக்கன. இவை யெல்லாம் வேறெந்த நூல்களிலும் விதிக்கப்பட வில்லை.

திருக்கோயிலும் ஆங்கே நடைபெறும் பூசை ஆதியனவும் அகவழிபாட்டின் உண்மையை விளக்கி ஞானத்தை உண்டாக்குவதற்கு இன்றி யமையாத கருவிகளாயுள்ளன. மலநோயை நீக்கும் வைத்தியநாதராகிய சிவபெருமான், ஆலயங்களையும் பிரதிட்டை பூசை உற்சவாதி களையும் செய்யுமாறு விதித்திருத்தல், அப்புற வழிபாடு காரணமாக ஆன்மாக்கள் அந்தர்யாக பூசையின் உண்மையை உணர்ந்து செய்து, சிவஞானமேலிட்ட விடத்துப் பரமுத்தியிற் சேர்த் தருளுதற்பொருட்டாம். இவ்வுண்மை தேவால யங்களிலே அமைக்கப்பட்டுள்ள மண்டபங்களா லும், தூபி, பிராகாரம், கோபுரம் முதலியவற்றாலும் உணரப்படும்.

சரீரத்திலே ஆறாதாரங்கள் அமைந்தி ருத்தல் போல, புறத்தேகாணப்படும் ஆலயத்திலும், கருப்பக்கிரகம் முதலிய மண்டபங்கள் ஆறாதார சொரூபமாய் வியங்குகின்றன. திருக்கோயிலி லுள்ள ஐந்தாம் ஆவரணத்தால் அன்னமயகோ சமும், நான்காம் ஆவரணத்தால் பிராணமகோச மும், மூன்றாம் ஆவரணத்தால் மனோமயகோ சமும், இரண்டாம் ஆவரணத்தால் விஞ்ஞானமய கோசமும், முதலாம் ஆவரணத்தால் ஆனந்தமய கோசமும், அறியப்படும். ஆகலின் பஞ்சாவரணங் களும், பஞ்சகோசங்களைக் குறிப்பனவாம். மூன்று பிரகாரமுள்ள ஆலயங்களில் அவை தூலம், சூக்குமம், காரணம், என்னும் முச்சரீரங்க ளையும் குறிக்கும். இரண்டு பிராகாரம் உள்ள னவாயின் அவை தூலம், சூக்குமம் என்னும் இரண்டு சரீரங்களையும் குறிக்கும்.

கோபுரத்தில் உள்ள ஒவ்வொரு பகுதிக ளும் இறைவனது தூலத் திருமேனியின் ஒவ்வொ ருறுப்பைக்குறிப்பன. கோபுரத்தில் ஈசுவரனது பராக்கிரம லீலாவினோதங்களும், அவரது அதி காரம் பெற்ற பிரம விட்டுணுவாதிய தேவர்கள், அட்டதிக்குப் பாலகர், சூரியசந்திரர் முதலியோர் களது உருவங்களும் அமைக்கப்பட்டுள்ளன. அதனால் பரமேசுவரனது கடவுட்டன்மையின் சிறப்பை அறிந்து அவரிடம் அன்பு செய்யவேது வாகும்.

தூபியானது பிருதுவி தத்துவம் முதல் முப்பத்தாறு தத்துவங்களாலும் கற்பிக்கப்பட்ட இருதயகமலத்தில் சிவபெருமான் எழுந்தருளி யிருக்கும் உண்மையைக் குறிக்கின்றது. தூபியும் கோபுரமும் தூல லிங்கமெனவும், விமானத்தில் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கம் சூக்குமலிங்க மெனவும் , அதற்கு முன்னுள்ள பலிபீடம் பத்திர லிங்மெனவும் படும். இவ்வுண்மை நோக்கித் திருமந்திரம்,

*"தூய விமானமுந் தூலம தாகுமா*
*லாய சதாசிவ மாகுநற் சூக்குமம்*
*பாய பலிபீடம் பத்திர லிங்கமா*
*மாய வரனிலை யாய்ந்துகொள் வார்கட்கே"*

என்று அருளிச்செய்தார்.

சிவலிங்கம், நந்தி, பலிபீடம், என்னும் மூன்ற னுள் சிவலிங்கம் பதியும், நந்தி பசுவும், பலிபீடம் பாசமுமாகக் கொள்ளப்படும். ஆலயங்களிலே சிவலிங்கமும் அதற்கு நேராக நந்தியும் பலிபீடமும் இருக்கின்றன. அவை மூன்றும் நேராகத் தாபிக்கப்பட்டிருத்தலால் அவை அனாதிநித்தியமாய் உள்ளன என்னும் உண்மை உணரப்படும்.

## சிவலிங்கம்.

சிவ சாதாக்கியம், அமூர்த்தி சாதாக்கியம், மூர்த்தி சாதாக்கியம், கர்த்திரு சாதாக்கியம், என்னும் நான்கும் ஒன்றையொன்று பற்றி ஐந்தாவதாகிய கன்ம சாதாக்கியத்தை அடைந் திருத்தலின், இது மற்றைய சாதாக்கியங்களிலும் விசேடமுடையது. கன்ம சாதாக்கியம் நாதமய மான லிங்கமும், பிந்துமயமான பீடமும் கூடியதாய்ப் பஞ்சகிருத்தியத்தை உடையதாய் இருக்கும். கன்மசாதாக்கியர் சிவலிங்கமும் பீடமுமாய் இருப்பினும், ஐந்து திருமுகங்களும், பத்துத் திருக் கரங்களும், பதினைந்து திருக்கண்களுமுடைய தியானரூபியாய் இருப்பர்.

சிவபெருமான் ஆன்மாக்களுடைய தியான பூசாநிமித்தமாக அருவுருவத் தருமேனியைத் தாங்கியநிலை ஆவுடையாளுடன் கூடிய இலிங்கமாம். இலிங்கத்திலே சிருட்டி காலத்தில் தோற்றமும், சங்கார காலத்தில் ஒடுக்கமுமாம். சங்கார காலத்தில் சமஸ்த சேதனாசேதனப் பிரபஞ்சங்களும் ஒடுங்கி, சிருட்டி காலத்தில் அங் ஙனம் உற்பத்தியாகின்றமையால் இலிங்கமெனப் படும் எனச் சுப்பிரபேதாகமம் கூறுகின்றது.

படைத்தல் முதலியனவற்றால் உலகத் தைச் சித்தரிப்பதாகிய பரமேசுரப் பிரபாவமே லிங்க மெனப்படுமெனினும் அமையும். லிங்க மென்னும் சப்தமானது சித்திரித்தல் எனப் பொருள்படுகின்ற "லிகி" என்னும் தாதுவினின் றும் பிறந்தமையால் சிவபெருமான் சிருட்டி முத லிய பஞ்ச கிருத்தியங்களாற் பிரபஞ்சத்தைச் சித்திரிக்கின்றார் என வருணபத்ததியுடையார் கூறுவர்.

ஞானசத்தியாகிய சிவலிங்கத்தின் கீழ் காணப்படும் ஆவுடையாள் கிரியாசத்தியைக் குறிக்கும். பரவெளியைக் குறிக்கும் சிவலிங் கத்திலே எப்பொழுதும் ஓர் அசைவு உண்டு. அதுவே பராசக்தியாகும். ஆன்மாக்களின் பாசத்தைக் கெடுத்தற்காக அசைதற் சத்தி லிங்கத்தைச் சுற்றிக்கொண்டிருக்கின்றது.

அவ்வசைவு லிங்கத்தில் உண்டென்பதை உணர் வதற்கு ஆவுடையாள் இலிங்கத்தைச் சுற்றிக் கீழடங்கி அமைந்திருக்கின்றது. ஆவுடையாளின் ஒருபக்கத்திலே நீண்டிருப்பதாகிய கோமுகியா னது ஆன்மாக்களைத் திருநோக்கம் செய்கின்ற குறிப்பாக அமைந்திருக்கின்றது. அவ்விலிங்கம் பிரமபாகம், விஷ்ணுபாகம், உருத்திரபாகமென் னும் மூன்று பாகங்கள் உடையதாயிருக்கும். அவற்றுள் பிரமபாகம் நபுஞ்சகலிங்கமும், விஷ்ணு பாகம் ஸ்தரீலிங்கமும், உருத்திரபாகம் புமலிங்க முமாகும். ஆண்ரூபம், பெண்ரூபம், நபுஞ்சகரூப மாயிருப்பது, அவன், அவள், அதுவாக, இருக்கம். உலகத்திலேயுள்ள உயர்திணைப்பொருளும், அஃறிணைப்பொருளும் தம்மிடத்திலே தோன்றி நின்றெடுங்குகின்றன என்பதையுணர்த்துதற் காகும்.

(பிரதிட்டா காலங்களில் முதல் திரிகண்ட நியாசம், மூர்த்தி மூர்த்தீசுவரநியாசம் முதலிய நியாசங்களைச் செய்து மேல் பரிசாகுதி செய் வதும் இப்பாவனை பற்றியதே ஆகும்.)

சிவலிங்கமே பிரணவ முதற் பொருள். இதன் சோதித் தன்மையே அகர, உகர, மகரமா யிருக்கும். அகரம் சிவமும், உகரம் சத்தியும், மகரம் கலைவடிவமுமாம். நாதவிந்துக்கள் அகர உகரங்களுள் அடங்கும். அகரம் கண்டமும், உகரம் கோமுகியும், மகரம் வட்டமுமாம். பிரணவம் இலிங்கமுமாயிருக்கும்.

*அகார முதலா வனைத்து மாய்நிற்கும்*
*உகார முதலா உயிர்ப்பெய்தி நிற்கும்*
*அகார உகார மிரண்டு மறியில்*
*அகார உகார மிலிங்க மதாமே.*

*– திருமந்திரம்*

*சத்தியும் சிவமுமாய தன்மையில் வுலகமெல்லா*
*மொத்தொவ்வா வாணும்பெண்ணு முயர்குண (குணியுமாகி*
*வைத்தன வவளால்வந்த வாக்கமில் வாழ்க்கை (யெல்லா*
*மித்தையு மறியார்பீடலிங்கத்தினியல்பு மோரார்.*

*– சிவஞான சித்தியார்*

லிங்கமென்பது சிவமேயாம். சிவத்துக்குப் பெயராகிய லிங்கமென்னும் பதம் உபசாரத்தால் பக்குவம் நோக்கி ஆன்மாக்களின் தியான பூசாநிமித்தம், அச்சிவம் விளங்கப்பெறும் ஆதாரமாகிய சைவம் முதலியனவற்றிற்கும் வழங்கப்படுகின்றது.

### மந்திரத் திருமேனி

உலகத்துக்கு முதற் காரணம் சுத்த மாயை, அசுத்த மாயை என்பன. இவற்றுள் மேலாகிய சுத்த மாயையில் சிவசத்தி சேர்ந்து நிற்றலானும் அச்சுத்த மாயையிலே தோன்றிய காரணத்தி னாலும் பயன் கொடுத்தற்பொருட்டுச் சிவசக்தி அதிட்டித்தலானும், பிரதிட்டை அக்கினிகாரியம் முதலியவற்றால் வழிபடுபவர்களுக்குப் போக மோக்ஷத்தைக் கொடுத்தலானும் ஆகமங்கள் சிவபெருமானுக்கு மந்திரத் திருமேனியை விதந்து கூறுகின்றன. அவற்றுள்ளும் பஞ்சப் பிரம மந்திரமானது மந்திரங்களுக்கு மூலமானதாலும், பிரதம சிருட்டி ஆரம்பத்தில் முதலிற்றோன்றிய தனாலும் சிவபெருமானுக்குத் திருமேனியாக விதந்தெடுத்துக் கூறுயதென அறிக. ஈசானம் முதலிய மந்திரங்கள் சிவபெருமானுக்குச் சிரம், முகம், இருதயம், குய்யம், திருவடிகள், என்பனவாம்.

*மந்திர மதனிற்பஞ்ச வடிவமாகத்*
*தந்திரஞ்சொன்னவாறிங்கென்னெனச்சாற்றக்*
*முந்திய தோற்றத்தாலும் மந்திர மூலத்தாலும் (கேணீ*
*மந்தமில் சத்தியாதிக் கிசைத்தலு மாகுமன்றே.*

*– சிவஞான சித்நதியார்*

சதாசிவமூர்த்தியினுடைய திருமேனி ஆன்மாக்கள் செய்த கன்மத்துக்கீடாக அறிந்து இரட்சிக்கும் குணமாகிய மந்திரம் ஆகையால் மந்திர ரூபமாகிய ஞானசத்தி வித்தியாதேகம் எனப்படும்.

### மூன்று கண்கள்

சூரியன், சந்திரன், அக்கினி, என்னும் முச் சுடர்களையும் அதிட்டிக்கின்றவர் தாமென்பதை யும், காருகபத்தியம், ஆகவனீயம், தக்ஷிணக்கி னீயம், என்னும் முத்தீ வேள்வியில் அவை யாவும் தம்மிடத்தே பொருந்தியுள்ளன என்பதையும், எல்லாக் கருமங்களையும் அறிந்து செய்யும் இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்திகளையும் உடையவர் தாமென்பதையும் மூன்று கண்கள் குறிக்கின்றன.

"சுடர் மூன்றுங்கண் மூன்றாக்
கொண்டானற்றான்காண்"

-அப்பர்

"முக்கணனென் பதுமுத்தீ வேள்வியிற்
றொக்கதென்னிடையென்ப தோர் சுருக்கே"

-பட்டினத்தடிகள்

"இவர்தாம் எல்லா மறியுமியல்பது நயனம்"

-சதாசிவரூபம்.

### ஐந்து திருமுகங்கள்

பரமசிவனது சுத்த குணங்களாகிய ஈசானம் முதலிய ஐந்தும், சுருமசாதாக்கியராகிய சதாசிவ மூர்த்திக்குத் திருமுகங்களாம்.

ஐந்து நிறங்களையுடைய ஐந்து திருமுகங்களைச் சிவபெருமான் கொண்டது, பஞ்சகிருத்தியத்துக்குக் காரணரும், பஞ்சகருத்தாக்களை அதிட்டிப்பவரும் தாமென்பதை அறிவித்தற்காகும்.

ஈசான் முதலிய ஐந்து மந்திரங்களும், அனுக்கிரகம், மறைத்தல், சங்காரம், காத்தல், படைத்தல் என்னும் ஐந்தொழிலையும் செய்யும் சத்திகளெனத் தத்துவத்திரய நிர்ணயம் செப்புகின்றது.

### திரிசூலம்

சிருட்டுத்தொழிலுக்குக் காரணமாகிய செனனி, போகங்களில் நியதி செய்வதாகிய ரோதயித்திரி, சங்கார கிருத்தியத்துக்குக் காரணமாகிய ஆரிணி என்னும் முச்சத்தி வடிவாகிய சூலப்படையைச் சிவபெருமான் ஏந்தியருளியது முத்தொழிலுக்கும் முதல்வரும், மும்மலங்களை நீக்குபவரும் தாமென்பதை யுணர்த்தும் உண்மையாகும்.

"மூன்று மூர்த்தி யுணின்றியலுந் தொழில்
மூன்று மாயின மூவிலைச் சூலத்தான்"

-அப்பர்சுவாமிகள்

"கோற்றேன் மொழிக்கிள்ளாய் கோதில்
பெருந்துறை க்கோன்
மாற்றாரை வெல்லும் படைபகரா- யேற்றார்
அழுக்கடையா நெஞ்சுருகமும் மலர்கள் பாயுங்
கழுப்படை காண் கைக்கொள் படை"

- திருவாசகம்

### புன்முறுவல்

ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் என்னும் மூவகைத் துயரையுங் கெடுத்தருளுங் காரணமாக இளமையாகிய புன்முறுவலைக் கொண்டருளினார்.

"இடர் மூன்றுமிழித் தருளுமிள முறுவன் முகமல ரிலங்க" என்பது சிவதருமோத்தரம். சந்திரன் சர்வஞ்ஞத்துவரூபம், பத்துத்திருக் கரங்கள் பத்துத் திக்குகள் என்றும், திரிசூலம் முக்குணம் என்றும் பரசு சத்தியமென்றும் சொல்லப்படும். வாள் ஈசுவரனுடையபராக்கிரம மாகும். வச்சிரம் போதிக்கப்படாத சத்தியாகும். சங்கார சத்தியாகிய அக்கினி பாசங்களைச் சாம்பராக்குவதாகும். நாகத்தின் கெம்பீர வடிவான சத்தி எல்லோரையும் நியமிப்பதாகும். மணியினது ஓசை மந்திர ரூபத்தை அறிவிப்பதாகும். அபயம் சமஸ்த லோகங்களையும் காக்கும் சத்தியாகும் எனக்காமிகாமத்திலும், கட்டுவாங்கம் பிரதாபமென்றும், அபயம் அனுக்கிரகமென்றும், பாசம் மாயா சொரூபமென்றும், அங்குசம் விவர்ணகுணமென்றும், மணி நாதத்துவ ரூபமென்றும், வாதுளாகமத்திலும் வருவனவற்றால் இவ்வுண்மை தெளியப்படும்.

### சிலம்பும் வீரக்கழலும்

சிலம்பையும் விரக்கழலையும் தரித்தமை ஆன்மாக்களைச் சோரமாகத் தன்வசப் படுத்துகின்ற முன்னை வினைகளை வென்று பிறவித் துன்பத்தை நீக்குபவரென்பதை உணர்த்துவதற்காகும்.

"வீட்டின்ப வெள்ளத் தழுத்தியிடுந் தாளினுமடியா
ருள்ளத்திலும் பிரியா வொண்சிலம்பும்
-கள்ளவினை
வென்றுபிறப் பறுக்கச் சாத்திய வீரக்கழலும்"

- போற்றிப்ப.'.றெடை

*"நெஞ்சலஞ் சலமரும் பிறவிநீடு வினையிற்*
*சஞ்சலம் சலமன்ற தனதன்பர் குழுவை*
*அஞ்சலஞ்சலெனுமஞ்சொலென விஞ்சுசரண்மேற்*
*செஞ்சிலம் பொடுபொலங் கழல்சிலம்ப மிகவே"*

*–கந்தபுராணம்*

சிவபெருமான் இவைகளை அணிந் தருளியமை நமது பிரயோசனங்கருதியன்று. எதற்காக அணிந்தருளினரெனில், ஆன்மாக்கள் அஞ்ஞான வளர்ச்சியினால் தாம் பிரமமென நினைத்து அகந்தைகொண்டு தாகத்திலாழாது பதியுண்மையறிந்து, தம்மை படைந்துய்யும்படி கொண்டருளிய உண்மையேயாகும்.

*"ஆதலாற்றினை வியப்பதற் கன்றவை யணித*
*லீதலாதொரு திறமுள தியாவரு மெவற்கு*
*நாதனேயிவ னென்றுதன் பாங்கரே நண்ணித்*
*தீதெலாமொரீஇ முத்தி பெற்றுய்ந்திடுஞ்செயலே."*

*– கந்தபுராணம்*

என்பதனாற்றெளியப்படும்.

**சிவாசனம்**

பிருதுவிதத்துவ முதல் குடிலா சத்தியந்த மான முப்பத்தாறு தத்துவங்களையும், இருநூற்றி ருபத்து நான்கு புவனங்களையும் உறுப்புக்களாக உள்ளதும், அநந்தாசனம், சிம்மாசனம், யோகா சனம், பதுமாசனம், விமலாசனமென்னும் பஞ்சா சனங்களையுடையதும் ஆகிய பெருமை வாய்ந் தது சிவமூதர்த்திக்கு ஆசனமாம்.

**விளக்கம்**

பிருதுவிதத்துவம், தாமரைக்கிழங்கு. அது தயிர்த்தி கலையால் வியாபிக்கப்பட்டு ஆதாரசத் தியின் சிரசிலிருக்கும். சலதத்துவம் கிழங்கை நெகிழ்விக்கும். அக்கினிதத்துவம் ஒன்றுபடுத்தி நீரை இழுக்கும் வாயுதத்துவம் இயக்கிக்கூட்டும். ஆகாச தத்துவம் இடங்கொடுக்கும்.

சத்தம், பரிசம், ரூபம், இரசம், கந்தமென் னும் ஐந்து தத்துவங்கள் தாமரையின் முளையா கும்.நாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் என்னும் கன்மேந்திரியங்கள் ஐந்தும் சுரோத்திரம், துவக்கு, ரட்சு, சிங்குவை, ஆக்கிராணம், என்னும் ஞானேந் திரியம், ஐந்து ஆகப்பத்துத் தத்துவங்களும் நாளத் தினுள்ளாக இருக்கும் ஒன்பது துளைவடிவங்க ளாகும். மனம், அகங்காரம், புத்தி என்னும் தத்து வங்கள் அகத்தில் நின்று தொழிற்படுத்தும். புத்தியின் பாவாட்டங்கள் சிம்ஹ வடிவாயி ருக்கும். பிரகிருதிதத்துவம், புருடதத்துவம், அராகதத்துவம், வித்தியாதத்துவம், கலா தத்துவம், நியதிதத்துவம், காலதத்துவம் என்பன தாமரையின் நாள வடிவாகும். இத்தத்துவங்க ளிலுள்ள புவனங்கள் நாளத்தின் முட்களாகும். அசுத்தமாயாதத்துவம் புறவிதழாகும்.

சுத்தவித்தியாதத்துவத்தில் அட்டவித்தியே சுவாரூபங்களாகிய எட்டுத்தளங்கள் இருக்கும். ஈசுவரம், சாதாக்கியமென்னுமிவ்விரு தத்து வங்களும் அறுபத்துநான்கு கேசர வடிவாயி ருக்கும். கிழக்குமுதலிய எட்டுத்திக்குகளிலு முள்ள அறுபத்து நான்கு கேசரங்களில் வாமை முதலிய எட்டுச்சத்திகளிருப்பர்.

சத்திதத்துவம் அக்கேசரங்களுக்குள் ளாகப் பொருந்திய பொருட்டு வடிவாம். சிவதத் துவம், ஐம்பது பீச வடிவாயிருக்கும். ஐம்பது வர்ணத்துவாவும் ஐம்பது பீசங்களுக்கும் அதி தேவதைகளாக இருப்பர். கர்ணிகையின் நடுவில் பிரணவ ரூபமான சத்திமண்டலமிருக்கும். அதில் சிவபெருமான் எழுந்தருளி இருப்பர். இப்படிப் பரமசிவனுக்கு ஆசனமாகிய பதுமத்தை ஆதார சக்திக்குமேல் பிருதுவிதத்துவமுதல் குடிலை பரியந்தம் வியாபித்துள்ளதாக சிந்திக்கவேண் டும். இம்முறை அறிந்து தியானித்துக்கறபிக்கும் ஆசனமே சிவாசன கற்பனமாகும்.

*"பதுமாதனந் தாணுற வீற்றிருப்பர் சதாசிவர்*
*தத்துவத்தவிசினுகந்தே"*

*–சிவதருமோத்திரம்*

**சோடசோபசாரம்**

ஆவாகனம், தாபனம், சந்நிதானம், சன்னி ரோதனம், அவகுண்டனம், தேனுமுத்திரை, பாத்தியம், ஆசமனீயம், அருக்கியம், புஷ்பதானம், தூபம், தீபம், நைவேத்தியம், பானீயம், ஜபசமர்ப் பணம், ஆராத்திரிகம் என்பன சோடசோப சாரங்கள்.

### ஆவாகனம்

ஆவாகனமாவது பூசையின் பொருட்டுச் சிவபெருமானை லிங்கம் முதலியவற்றில் வரவழைத்து அபிமுகமாகச் செய்வதென்னும் பாவனையாகும். எங்கும் வியாபித்திருக்கும் கடவுளை ஆவாகனஞ் செய்வது எங்ஙன மெனில், விறகுமுழுவதும் நிறைந்திருக்கும் நெருப்பைக் கோலினாற்கடைய அது ஓரிடத் திலே பிரகாசித்தல் போல, எங்கும் நிறைந்திருக் கும் கடவுளைச் சிரத்தையுடன் ஓரிடத்தில் அழைத்து அபிமுகமாகச் செய்வதென்க.

### ஆவாகனம் இருவகைத்து

பிரதிட்டகாலத்திலே சர்வசங்கார காலமள வாக சிவலிங்கத்திலே சாந்நித்தியமாதற்காகச் செய்யப்படும் ஆவாகனம் "சிற்பிரகாசாவாகனம்" எனவும், தினந்தோறும் பூசாகாலத்திலே சிவலிங்கத்தில் எழுந்தருளியிருக்கும் சதாசிவ மூர்த்தியினுடைய நான்கு முகங்களிலும் வியாபித் திருக்கும் ஈசான முகம் தன்னைப்பார்க்கும்படி செய்வது 'அபிமுகீகரண ஆவாகனம்' எனவும் ஆவாகனமிருவகைப்படும். மூலமந்திரத்தினால் தரிசிக்கப்பட்ட பரிபூரணத்தை ஆன்மாவானது சிவப்பரகாசமாகிய அருளினால் அறிந்து, அதில் அழுந்துதலே இதனுண்மையாகும்.

### தாபனம்

தாபனமாவது, தயாநிதியே அடியேனுக்கு அனுக்கிரகம் செய்யும் நிமித்தம் இச்சிவலிங்கத் தில் எழுந்தருளியிருக்க வேண்முமென்று அன்பு டன் செய்யும் பாவனையேயாம். இதனுண்மை யைக் கூறுமிடத்து, ஆன்மா சிவபெருமானைத் திருவருளினால் அதிலழுந்துதலை நிலைபெறச் செய்தலாம்.

*"அலையாதழுந்த நிலைபெறல் தாபனம்"*

### சந்நிதானம்

சந்நிதானம்மாவது, ஆன்மாவினறிவு சிவபெருமானுடைய பரிபூரண குணத்திலும், சிவபெருமானது பரிபூரணத் தன்மையானது ஆன்மாவினறிவிலும், ஒன்றையொன்று பிரியாதபடி, ஆண்டானுமடிமையுமாக நிற்றலே இதனுண்மையாகும்.

### சந்நிரோதனம்

சந்நிரோதனமாவது, பகவானே எப்பொழு தும் என்னிடத்தில் அனுக்கிரகம் வைத்திருக்க வேண்டும் என்னும் மனேபாவனையேயாம்.

ஆன்மாவினிடத்துப் பொருந்திய அறிவு எக்காலத்தும் நீங்காதபடி சிவத்திலெரடுங்கு தலென்னும் உண்மையேயாகும்.

### அவகுண்டனம்

அவகுண்டனமாவது, எண்ணிறந்த கார ணங்களையுடையவராகவும், சின்மயராகவும், எங்கும் நிறைந்திருப்பவராகவும், இருக்கும் பரமேசுவரரை பத்தர் அல்லாதவர்களுக்கு அறிவிக்காமல் மறைத்தல் என்று சோமசம்பு பத்ததி கூறுகிறது.

### பாத்தியாதி

சிவனைப் பூசித்தலினாலே சிவசத்தி பதியம் பெற்ற சிவார்க்கியத்தால், பாத்தியம், ஆசமனீயம், அருக்கியம் என்பவைகளைக் கொடுத்தல் ஆன்மசுத்தியின் பொருட்டாகும்.

### அபிஷேகபலன்

வடிகட்டிய திருமஞ்சனம் கங்கா தீர்த்தத் துக்குச் சமான மாதலால் திருமஞ்சனத்தை வடிகட்டி வாசனைத் தரவியங்களையும் புஷ்பங்க ளையும் மிட்டு, "அருளெனும் புனலினையாட்டி" எனக் காசிகாண்டம் பகர்ந்தாங்கு, திருவ ருளாகிய ஞானமே திருமஞ்சனமெனப்பாவித்து, அபிஷேகஞ் செய்யின் மல நிவாரணமாகும். "திகழ்மலசுத்தி நிமித்தமாக, மகிழ்வுடனே திருமஞ்சனம்பண்ணி" என்பதனால் உணர்க. சந்தனாதித்தைலம், சுகத்தையும், மாக்காப்பு மலநிவாரணத்தையும், ஆமலகம் லோக சாந்தியையும், மஞ்கள் மா இராச வசியத்தையும், பஞ்ச பவ்வியம் ஆன்ம சுத்தியையும், இரச பஞ்சாமிருதம் வெற்றியையும், பஞ்சாமிருதம் செல்வத்தையும், பஞ்சபலலோதகம் மந்திர சித்தையும், பால் ஆயுள் விருத்தியையும், தயிர் பிரஜா விருத்தியையும், நெய் மோக்ஷத்தையும், தேன் சங்கீதவன்மையையும் கருப்பஞ்சாறு நித்திய சுகத்தையும், சர்க்கரை சததுரு நாசத்தையும், வாழைப்பழம் பயிர் விருத்தியையும், பலாப்பழம் லோக வசியத்தையும், மாம்பழம் சகல

வெற்றியையும், தமரத்தம்பழம் பூமி லாபத்தையும், மாதுளம்பழம் பகை நீக்கத்தையும், நாரத்தம்பழம் சற்புத்தியையும், எலுமிச்சம்பழம் மிருத்துசிவார ணத்தையும், இளநீர் சற்புத்திரப்பேற்றையும், இபமிருத்யு நிவாரணத்தையும், கோரோசனை தீர்க்காயுளையும், சந்தனக்குழம்பு சாயுச்சியத் தையும், பச்சைக்கர்ப்பூரம் பய நிவாரணத்தையும், கஸ்தூரி வெற்றியையும், பன்னீர் சாலோக்கியத் தையும், சகஸ்ரதாரை ஞானத்தையும், ஸ்நபனம் ஜன்ம சாரல்யத்தையும், ஸ்நபனம் ஜன்ம சாபல யத்தையும் கொடுக்குமென்று சிவாகமங்கள் செப்புகின்றன.

### திருவொற்றாடை

சிவபெருமானுக்குத் திருவொற்றாடை சாத்தியவர்கள் தங்கள் மரபிலுள்ள சுற்றத்தார் களை நகரத்திலிருந்தெடுத்து முத்தியிற் சேர்ப்பார்கள்.

### சந்தனம்

சுகந்த திரவியங்கள் சேர்க்கப்பட்டதும் திருவருட் சத்தியமானதுமான சந்தனத்தைச் சாத்துபவர்கள் பிரபஞ்ச வைராக்கிய முடையவர் யளாய்ச் சிவலோக சுகத்தை அடைவார்கள். மெய்யன்போடு சந்தனம் சாத்துபவருடைய பேற்றை மூர்த்தி நாயனாருடைய சரித்திரத்தால் அறிக. இது திருவருட்சத்தி பதிதலென்னும் பாவனையாம்.

### புஷ்பதானம்

வாசனையுள்ள புஷ்பங்களைச் சிவபெரு மானது திருமுடியிற் சாத்துதல் சுத்தசை தன்னியமான ஆனந்தத்தின் பொருட்டாம்.

*"நறுமலர் தன்னை நல்வீட் டின்பங்*
*குறுகுத லேது வாகவுங் கொடுத்து"*

என்பதால் அறிக. சாத்துவிக குணமுள்ள வெண்ணிற புஷ்பங்களால் சாத்துவிககாலமாகிய உஷக்காலம், சாயரக்ஷை, அர்த்தயாமம் என்னும் காலங்களில் அருச்சித்தவர்கள் மோக்ஷத்தை அடைவார்கள்.

இராசதகுணமுடைய செந்நிறப் புஷ்பங் களால் இராசத காலமாகிய மத்தியானத்திற் பூசித்தவர்கள் போகத்தை அடைவார்கள். இராசத சாத்துவிக குணமுடைய கொன்றை முதலிய புஷ்பங்களால், இராசத சாத்துவிக காலமாகிய பிராதக் காலத்தில்அருச்சித்தவர்கள் போக மோக்ஷங்களைப் பெறுவார்கள்.

இராச தாமத பத்திரங்களாகிய வில்வம் முதலியவைகளால் அருச்சித்தவர்கள் போக மோக்ஷங்களைப் பெறுவார்கள்.

*வாசநலஞ் செய்திமையோர் நாடோறும் மலர்தூவ*
*ஈசனெம் பெருமானாரினிதாக வுறையுமிடம்*
*யோசனைபோய்ப் பூக்கொணர்ந்தங் கொருநாளு*
*(மொழியாமே*
*பூசனைசெய் தினிதிருந்தான் புள்ளிருக்கு*
*வேளூரே.*

*-திருஞானசம்பந்தர்*

*விண்டமாமலர் கொண்டு விரைந்துநீர்*
*அண்டர் நாயகன் றன்னடி சூழ்மின்கள்*
*பண்டு நீர்செய்த பாவம் பறைந்திடும்*
*வண்டு சேர்பொழில் வான்மியூ ரீசனே.*

*-திருநாவுக்கரசர்*

### வஸ்திரம்

வெண்மை நிறமுடைய பட்டு வஸ்திரத்தை அன்புடன் சிவபெருமானுக்குச் சாத்தயவர்கள் சிவலோகத்திலிருப்பார்கள். இது திரோதான சத்தி நீக்கமென்னும் பாவனையாம்.

### தூப தீபம்

கிரியா சத்திரூபமாகிய தூபத்தால் ஆராதனை செய்தவர்கள், ஆணவ மல சத்தியாகிய அறியா மையினின்று நீங்குவார்கள்.

சிற்சத்தியின் வாசமாய் ஞான விளக்க மாயிருப்பது தீபம். இதனால் ஆராதனை செய்பவர்களுக்குச் சிவபெருமான் அபமிருத்து நிவாரணத்தையும், பாப நீக்கத்தையும், ஞானத் தையும், கொடுத்தருளுவார்.

### நைவேத்தியம்

யானையானது விளாம்பழம்த்தினுடைய சாரத்தை எப்படி பக்ஷிக்கின்றதோ, அப்படியே கடவுள் மந்திரத்துடன் நிவேதிக்கப்பட்ட

பொருள்களை ஏற்றருளுகிறார். மனவமைதி பிறத்தற்காகத் தற்போதத்தை நைவேத்தியமாக ஒப்பித்தலே இதன் பாவனையாகும்.

*பாட்டிற் கின்புறு குருபரன் பாதமேற் கண்ணீர்*
*ஆட்டிச் சொன்மல ரணிந்துதற் போதவின் னமுதை*
*ஊட்டித் தற்பர ஞானமா மோமவெங் கனலே*
*மூட்டிச் சம்புவின் பூசைமேன் முயற்சிய ரானார்*

*-திருவிளையாடற் புராணம்*

### சிவயாக மண்டப சொரூபம்

யாக மண்டபமானது அத்துவாக்களின் வடிவமாயுள்ளது. மண்டபம் அமைக்கப்பட்ட இடம் இருநூற்றிருபத்துநான்கு புவனாத்துவா வடிவாயுள்ளது. மண்டபத்திலே அமைக்கப்பட்ட பதங்கள் எண்பத்தொரு பதாத்துவாவடிவாக உள்ளன. மண்டபத்தின் நடுப்பாகம் ஐம்பத்தொரு வர்ணத்துவா வடிவாயுள்ளது. குடும்பங்கள் பதினொரு மந்திராத்துவா வடிவமாக உள்ளது. ஓமத்திரவியங்கள் முப்பத்தாறு தத்துவாத்துவா வடிவமாயுள்ளன. யாகசாலையானது சாந்திய தீதாகலா சொரூபமாகும். நான்கு துவாரங்களும் சாந்திகலை முதலிய நான்கு கலை வடிவமாகும் என்று சைவ பூஷணம் பகரும்.

### ஆசனம்

யாக கும்பத்திலே ஆவாகிக்கப்படும் மூர்த்திக்கு உப வேதிகை அநந்தாசனமும் மகாவேதிகை சிம்மாசனமும், நெல் யோகாசனமும், அரிசி பதுமாசனமும், எள் விமலாசனமும், நல்ல மலர் பிரணவாசனமுமாகும். பிருதுவி முதல் குடிலை யீறாகிய முப்பத்தாறு தத்துவங்களும் பஞ்சாசனமாக அமைந்துள்ளன. நெல் தாமரை நாளத்தின் முட்களாகவும் அரிசி தாமரைப்பூ இதழ்களாகவும், பயறு தாமரைப் பொகுட்டாகவும், உழுந்து பீசமாகவும், எள் கேசரங்களாகவும் பாவனை செய்யப்படுகின்றன.

### யாக தேவர்கள்

பிரமவிட்டுணுக்கள், இந்திராதிதேவர்கள் யாவரும் அசுத்தமாயா புவனங்களிலிருப்பவர்களும், சுத்த வித்தியாதத்துவவாசிகளுமென இருதிறப்படுவர்.

சுத்த வித்தியாதத்துவத்தில், நந்தி முதலிய கணநாதர்கள் எண்மர்களும், பிரம விட்டுணுக்களும், இந்திராதிலோகபாலகர்களும் இருப்பர்கள். சுத்த வித்தை முதலிய தத்துவங்களிலிருப்பவர்களுடைய சாரீரம் வைந்தவகையாலும், மலபரிபாக முற்றுப் பரமசிவனருளாற் பதம் பெற்றவர் ஆதலானும், பிறப்பிறப்புக்கள் நீங்கி ஆண்டு நின்றபடியே சிவதரிசனத்தால் ஆனந்த விளக்கத்தை அடைபவர் ஆகலானும், இவர்களே சிவபூசையாகாதி கிரியைகளில் பூசிக்கப்படும் பெருமைபெற்றவர்கள் ஆவார்கள் என்பது சிவாகம நூற்றுணிபாகும். அசுத்த மாயாதத்துவ வாசியளாகிய பிரமவிட்ணு இந்திரன் முதலிய தேவர்களது சரீரம் பிரகிருதி சம்பந்த மாக லானும், முன் பரமசிவன் அனுக்கிரகமில்லாமையாலும், அவர்களுடைய தானம் பசுத்தானமாகையாலும், அசுத்ததத்துவம் முப்பத்தொன்றையும் மனசாற்கடந்து சுத்தவித்தியாதத்துவமயமான யாகசாலையை அடைந்து பூசித்து வணங்குவதினாலும், அசுத்தபுவனவாசிகளான பிரம விட்டுணு முதலியோர் சுத்தவித்தியாதத்துவமயமான யாகசாலையில் பூசிக்கப்படத்தக்கவர்களல்லர்.

### ஆகுதி

யாகசாலையிலுள்ளசிவாக்கினியில் ஆகுதி செய்தல் ஆன்மாக்கள் செய்த கன்மங்களை அனுபவத்துக்கு வரவொட்டாது சுத்தமாக்கும் பாவனையாகும்.

### கர்ப்பூர ஆராதனை

கர்ப்பூரம்வெண்மைநிறமுடையதாய், அக்கினி பற்றியவிடத்தே அதன் வடிவமாக விளங்கி, ஒரு பற்றுமில்லாமல் முற்றுங்கரையப்பெற்று, ஆகாயத்துடன் கலந்து அத்துவிதமாய் விளங்கல்போல, ஆன்மா வெண்மை நிறமான சாத்துவித குணத்தைப் பொருந்திஞானாக்கினிபற்றிய விடத்தே பசுத்தன்மை நீங்கி, சிவத்தன்மை விளங்கப்பெற்று, எல்லாப் பற்றுங்கழன்று சிவத்தோடு கலந்து அத்துவிதமாய்ப் பேரானந்தப் பெருவாழ்வடைதல் வேண்டும் என்னும் பாவனையாகவே கர்ப்பூராதனை செய்யப்படுகின்றது.

*"அக்கினி கர்ப்பூரத்தை அறவிழுங்கிக் கொண்டாற்*
*மக்கினம்பட்டுள்ளே மருவிருந்தானடி" (போல்*

*-பட்டினத்து அடிகள்*

*"தீ தணையாக் கர்பூர தீபமென நான்கண்ட*
*சோதியுடனொன்றித் துரிசறுப்ப தெந்நாளோ"*

*-தாயுமான சுவாமிகள்*

**நமஸ்காரம்**

பிரமவிட்டுணுக்களது தொழிலையும், அவர்களை அதிட்டிக்கும் ஞானக்கிரியைகளையும், தற்போதமென்னும் அதிகாரத்தையும் நீங்கி, நதியானது சமுத்திரத்தோடு சேர்ந்து ஒன்றாயிருத்தல் போல, ஆன்மா சிவத்தோடு சேர்ந்து, அத்துவிதமுற்றிருப்பதே நமஸ்காரத்தின் உண்மையாகும்.

*"ஞானத்தாற் றொழுவார் சில ஞானிகள்*
*ஞானத்தாற் றொழுவே னுனை நானலேன்*
*ஞானத்தாற் றொழுவார்கள் தொழக் கண்டு*
*ஞானத்தா யுனை நானுற் தொழுவனே"*

என்பதனாலும்

*"பெருமலாந் தவம் பேதைமை தீரலாந்*
*திருகலாகிய சிந்தை திருத்தலாம்*
*பருகலாம் பரமாய தோரா னந்தம்*
*மருகலானடி வாழ்த்தி வணங்கவே"*

என்பதனாலுமறிக.

*திருச்சிற்றம்பலம்.*

**(நன்றி வேலூர் கும்பாபிஷேக மலர்)**

## அகத்தியமுனிவர் அருளிய மாதப் பதிகங்கள்

**காப்பு**
வேதராகத்தில் விளங்கும் விமலை விழைந்து தூங்கும்
பாதர் ஆகத்தில் கலந்தாள் பவானி பராபரைக்கு
மாத வாரத்துப் பதிகம் விளம்ப வரந்தருவாய்
நாதயோகத்தின் அனுபவமாம் கணநாதனே

**சித்திரை**
முத்தமிழ் போல் முக்கடல்சூழ் குமரிமுனை வளரும்
உத்தமியே ஸ்ரீசக்கரந்தனில் உதித்தவளே
எத்தருணத்திலும் எனைப் பிரியாமல் எனக்கிரங்கி
சித்திரைத் திங்களில் வந்தருள் செய்வாய் சிவக்கொழுந்தே

**வைகாசி**
கை கால் நுடங்கியும் கண் பஞ்சடைந்தும் ஈ காகம் கொத்தி
மெய்தான் அழுகியும் மாள் வோரைக் கண்டு மிக நொந்தேன்
உய்கேனோ ஓ வென்று உளல்கின்றேன் நீ மனமிரங்கி
வைகாசி எல்லாம் வருவாய் மதுரை மனோன் மணியே

**ஆனி**
ஊனில் உளத்தில் உணர்வில் உயிரில் உயிர்க்குயிராம்
வானில் மொழியில் கலந்து நின்றாடும் மலர்க் கொடியே
ஞானிகள் தேடும் பரஞ்சுடரே உன்னை நான் பணிந்தேன்
ஆனி மாதத்தில் அருள் புரிவாய் ஜகதாம்பிகையே

**ஆடி**
வாடி வருந்தும் மனம் தண்மையாக மழை பொழிவாய்
கோடிமார்த்தாண்ட சுயசோதி வீசும் குளிர் நிலவே
பாடிவந்தேன் இன்னும் பாடுகின்றேன் எங்கள் பாக்கியத்தால்
ஆடியில் ஆடிவருவாய் சிவன் கொஞ்சும் அஞ்சுகமே

**ஆவணி**
காவணியாவது கண்மலரால் கலைகாட்டுகின்ற
பாவணியாவது அனுபூதியால் அன்பு பற்றுகின்றோம்
நாவணியாவது நாமத்தினால் அன்றோ நாடும் என்முன்
ஆவணித்திங்களில் வந்தருள்வாய் எனை ஆண்டவளே

**புரட்டாதி**
இருட்டாசையாம் குழிவீழாமல் காமுவிரண்டு பேய்கள்
வெருட்டாமல் காவென்று வேண்டுகின்றேன் இந்தவீணனையும்
பொருட்டாக எண்ணி அருட்கோல் அளித்தநீ புன்னகைத்து
புரட்டாதித்திங்களில் வந்தருள்வாய் அன்னபூரணியே

**ஐப்பசி**
மைப்படியும் கயற்கண்ணி மதுரைமரகதத்தால்
கைப்படியா எழில்மான் என்று அரன் உனைக்கைப்பிடித்தான்
அப்படியே மனக்கோலம் கண்டு ஏழை அகம்மகிழ
ஐப்பசி மாதம் வருவாய் அடியேன் அடைக்கலமே

**கார்த்திகை**
வார்த்தை குழறிட மெய்புளகிக்க மனம் உருகித்
தீர்த்தமாம் கண்ணீரில் நின் தாள் அலம்பி நிதம் தொழுதேன்
பார்த்தவையாவும் தீதென்று உணரும் பரிபக்குவத்தால
கார்த்திகை திங்கள் வருவாய் கருணைக் கழஞ்சியமே

**மார்கழி**
சேர்சிறகாலை துயில் நீத்தெழும் செல்வருடன்
நீர் நுழைந்தாடிமலர் கொய்து சன்னதி நின்றேன்
போ்பல பாடி வணங்குகின்றோம் எம்பிழை தவிர்க்க
மார்கழி மாதம் வருவாய் அம்மா ஞான மாணிக்கமே

**தை**
கைத்தும் கறுக்கும் ஒறுக்கும் கசடரைக் கால்பணிந்து
பொய்த் துன்பமேனியைப் போற்றுகின்றீர் இருள் போக உள்ளே
வைத்தால வரந்தருவாய் எங்கள் தாயென்று வாக்குரைத்தேன்
தைத்திங்கள் வந்தெண்ணம் ஈடேற்ற வேண்டும் தயாநிதியே

**மாசி**
காசியைக் கயிலையைக் கண்டும் கருத்தில் களங்கம் என்னும்
பாசியை நீக்கார் பலன் பெறுவரோ பரிந்து நன்மை
பேசி அன்புப் பணி செய்வார் பெரியோர் மெய்ப் பேறளிக்க
மாசியில் ஆசிதருவாய் மாசில்லாமாணிக்கமே

**பங்குனி**
எங்கும் நின் கண்ணுண் டெதையும் நீ கேட்பாய் எலாமுனக்குள்
தங்கும் நீயே தேவ தேவாதிகட்கும் தலைவி அன்பால்
பொங்கும் மனத்தே முனைத்துத் தழைக்கின்ற பொற்கொடி நீ
பங்குனித்திங்களில் வந்தருள் செய்வாய் பராசக்தியே

உ
சிவமயம்

# கும்பாபிஷேக தத்துவம்

- *விஸ்வ நாராயண சர்மா*

உலமகெல்லாம் ஒளியூட்டும் செஞ்சுட ரோன் செங்கதிர்கள் எப்பொருளையும் எரித்து விடுவதில்லை. எனினும் குவிவில்லை ஒன்றின் மூலம் அக் கதிர்களை ஒன்றினைப்பதனால் நாம் நெருப்பைப் பெற முடியும். அவ்வாறே அண்டசரா சரமெங்கும் நீக்கமற விறகில் தீ போலவும், பாலில் நெய் போலவும், நிறைந்த திருவருட் சக்தியானது மந்திரம் கிரிகை, பாவனை மூலம் விக்கிரஹங் களின் மீது நிலை நிறுத்தப் படுகின்றது. பசுவிட மிருந்து நேராக நெய் எடுத்தவர் யாருமில்லை. பூமியிலிருந்து நீரையும் தூர் இன்றிப்பெற்றவரு மில்லை. ஆனால் பாலில் நெய்யுமுண்டு, பூமியில் நீருமுண்டு. அதே போல் திருவருட் சக்தியை வேண்டுவோரும் சரிகை, கிரிகை, யோகம், ஞானம், ஆகிய மார்க்கங்களின் ஒன்றின் வழியில் நின்று அருளைப் பெற வேண்டும். இந்த நான்கு வழிகளையும் ஒன்றாகத் தன்னுள் அடக்கி ஆண்மாக்களை உய்விப்பதற்காக அமைந்த வையே ஆலயங்கள். அவ்வாலயங்களில் அருட் சக்தியை பிரவகிக்கச் செய்தல் கும்பாபிஷேகம் எனப்படும்.

அகிலதின் அளவிட முடியாத சக்திப் பெருக்கம் நன்மையும் தீமையும் கலந்து தரவல்லது. உண்மைப்பொருளாக பிரத்தியக்ஷப் பிரமாண மாக விளங்கும் எட்டுப்பொருட்கள் எங்கும் எல்லாவிடத்தும் யாராலும் காணமுடியும். அவை யாவன நிலம், நீர், நெருப்பு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா, என்பனவையாம். இவ்வெட்டினையும் ஒன்றிணைத்து ஆகம பிரமாணம் பற்றி ஆவாஹித்தல் கும்பாபிஷேகம் ஆகும். கந்த புராண நாயகரின் உத்பவ காரணிகளையும் அநுகாரணிகளையும் சற்று சிந்தித்தால் இவ்வுண்மையை அநுமானப்பிர மாணத்தால் உய்த்துணர முடியும். இயற்கையின் இயக்கமும் முழுவதிலும் ஆண்சக்தி பெண்சக்தி என்ற இரண்டின் தொழிற்பாடு இருத்தலை அனு அராச்சியில் வைத்து விஞ்ஞானம் விளம்பரப் படுத்தி விட்டது. "ஏலெக்ரன்" ஆண் எனவும் "நீயூட்டன்" பெண் எனவும் கொள்ளப்படுகின் றது. ஆயினும் அவை யிரண்டும் தனித்தனி சடங்களே இரண்டும் ஒன்றை யொன்று சேரும் பொழுது ஆக்க சக்தியும் அழிவு சக்தியும் பெருமளவில் பெறப்படுவது மெய்யாலும் விஞ் ஞான உண்மை. இதனை எமது மெய் ஞானிகள் தமது ஞான திருஷ்டியால் எப்பொழுதோ தாம் கண்ட செம்மை பொருந்திய ஒளியை சிவன் என்றும் நீல ஒளியை சக்தி என்றும் சிவசக்தி ஐக்கியமே பிரபஞ்ச இயக்கத்தின் அச்சாணி என்றும் கூறியுள்ளார்கள். இதன் பொருட்டே சிவஅச்சமான கும்பத்தை சத்தியம் சமான யாக சாலையில் வைத்து பூசித்து பின் யாகத்தை (ஓமம்) கும்பத்தில் சேர்த்து கும்பத்தில் அபிஷேகித்தல் கும்பாபிஷேகம் என வரையறுக்கப்பட்டது.

ஆலயங்களிலங் ஸ்தாபிக்கப்படும் மூர்த்தி களில் மூன்று அம்சங்கள் பொருந்தியுள்ளன. அவை மந்திரம், யந்திரம், திருவடிவம், என்பன வாம். யந்திரங்களில் வரையப்படும் பீஜ மந்திரங் களும் ரேகைகளும் காரண சரீரமாகும். சிவாச் சாரியாரின்தியானத்திலும் புறக்கிரிகைகளி னாலும் திருவடிவத்தில் ஆவாஹனஞ் செய்தல் சூக்கும் சரீரமாகிய மந்திரமூர்த்தியாகும். சிற்பிகளினால் அமைக்கப்படும் திருவடிவங்கள் தூல சரீரமாகும். தூல மூர்த்திக்கு ஆதாரமாய் அமைவது யந்திரமாகிய காரண சரீரமாகும். இதனை நல்லை நகர் நாவலரும்.

"கல்வெள்ளி செம்புகளிலே பதியினது விளக் கம் மந்திர நியாசத்தின் பின்னன்றி முன்னில்லை" என விளக்கியுள்ளார்.

"இய மானனிந்திரவியெரி வானி லஞ்ச லில மெறி காலெனும் பகுதியிரு நான் மயமான" என்றபடி பிருதிவி அம்சமாகிய பிம்பங்பளில், ஜலத்தினால் கும்பம் அமைத்து அக்கும்பத்தில் தேயு வாகிய யாகாதி காரியங்களையும் வாயு வாகிய உபசாரங்களையும் மந்திரம், நாதம், கீதம், ஆகிய ஆகாய தத்துவத்தையும் ஒன்றிணைத்து குறிப்பிட்ட சுபவேளையில் பெருமானே நீவிர் இவ்விடத்து சூரிய சந்திரர், உள்ளவரை குறை விலா திருவருளோடு அருளாட்சி செய்ய

வேண்டுமென ஆன்மாக்களாகிய அடியார்களின் பிரார்த்தனையோடு அபிஷேகித்தல் மஹாகும்பாபிஷேகம் எனப்படும்.

இக்கால விஞ்ஞான ஆராச்சியின் தேர்வுகள் யாவும் அக்கால சைவாலய கிரியைகளில் அமைக்கப்பட்டிருத்தலைக் காணலாம்.

ஒவ்வொரு கிரியைகளும் நிறைந்த தத்துவங்களை உள்ளடக்கியுள்ளவை உணரற்பாலது இதனாற்தான் கும்பாபிஷேகம், மஹத் பெரியது. எனவும் சைவாலயக்கிரியைகளில் மிக முதன்மையானது எனவும் விதந்து கூறப்படுதலையும் காண்கின்றோம்.

*"கற்றதனாலாய பயனென் கொல் வாலறிவன்*
*நற்றாள் தொழா ரெனின்"*

– *(திருக்குறள்)*

நமது துன்ப நீக்கத்துக்கும் இன்ப ஆக்கத்துக்கும் உரிய சாதனங்கள் மூன்று

1) மணி - சிவலிங்கம்
2) மந்திரம் - திருவைந்தெழுத்து
3) மருந்து - திருநீறு.


**"வேதாகம வித்தியா பூஷணம்"**
**பிரம்மஸ்ரீ. விஸ்வ நாராயண சர்மா**
கும்பாபிஷேகசர்வசாதகர்
அதிபர் ஸ்ரீதுர்க்கா வேதாகம பாடசாலை
தெல்லிப்பழை -ஸ்ரீலங்கா.


## அகத்தியமுனிவர் அருளிய வாரப் பதிகங்கள்

**ஞாயிறு**

ஆயிரம் நாமத்தில் அர்ச்சனை செய்தேன் அடிபணிந்தேன்
தாயினும் அன்பு பொழிந் தென்னைத் தாங்கும் தமிழரசி
பேயும் பிணியும் வறுமையும் போக்கி விளக்கிடுவாய்
ஞாயிறு தோறும் வருவாய் சிவலோக நாயகியே

**திங்கள்**

சங்கப் புலவர் கவிக்கு ஒளியூட்டும் தனிப்பொருளே
இங்கிதப் பணிக்கே என் அங்கத்தை இட்டேன் எனக்கிரங்கி
சிங்கக்குருளை வடிவேல் முருகனுக்கு சேர்ந்திருக்க
திங்கட்கிழமை வருவாய் அருள்வாய் சிவசக்தியே

**செவ்வாய்**

பங்கஜ பாதம் பணிந்தறியேன் பக்தர் பாடுகையில்
அங்கம் சிலிர்க்க அழுதறியேன் ஏழை அயினுமென்
சங்கடந் தீர்த்தருள்வாய் என்றுனையே சரண் புகுந்தேன்
மங்கள வாரம் வருவாய் அம்மா ஜீவமாணிக்கமே

**புதன்**

மதமாயைச் சேற்றில் உழன்றேன் சிவாமுத வாரிதியை
இதமாகச் காட்டி நீராட்டி உள்ளத்தில் அழுக்ககற்றி
பதமான யோகசம்பத்தெல்லாம் தந்தெனைப் பாடவைத்தாய்
புத வாரம் தோன்றி அருள் புரிவாய் தெய்வப் பூங்குயிலே

**வியாழன்**

ஒருவாய் அமுதை முருகனுக்கு ஊட்டி மற்றொன்றை முன்றோன்
பெருவாயில் ஊட்டி மகிழ்கின்றபோது பிதிரும் அன்னம்
தருவாய் எனக் காத்து நிற்கும் இவ்வேளை தவப்பயன் போல்
குருவாரந்தன்னில் வருவாய் சிவயோக கோகிலமே

**வெள்ளி**

துள்ளித்திரியும் மனம் உள்ளடங்க நின் தோத்திரங்கள்
அள்ளிக் குடித்தேன் உடலம் கூத்தாட அகக்கதவை
மெள்ளத்திறந்து தெளிந்து குளிர்ந்து விளக்கேற்றினேன்
வெள்ளிக்கிழமையில் வந்தருள்வாய் கோகிலமே

**சனி**

மனக் கவலை கிங்கிடமில்லை தாழ்வில்லை வாட்டமில்லை
இனிக் கிரகங்கள் கொடும் பார்வையில்லை இடருமில்லை
எனக்கிரங்கி என் பாடலை ஏற்றாய் பேரின்பமீந்தாய்
சனிக்கிழமை கண் வருவாய் சிவசங்கரி சங்கரியே

**பயன்**

திங்கள் ஈராறும் தினங்கள் ஓரேழும் திருப் பெயரை
எங்கிருந்தாலும் புகல்வேன் நான் செல்லும் இடங்களெல்லாம்
மங்களம் பொங்கி மர போங்கி வாழ வரந் தருவாய்
நங்கை சிவகாமி அம்மா அகிலாண்டநாயகியே

- முற்றும் -

# திருவிளக்கு பூஜையும் வழிபாடும்

***துன்னையூர் ராம். தேவலோகேஸ்வரக் குருக்கள்.***

மங்கள மங்கையருக்கு மங்களம் தரும் பூஜையிலே முதலிடம் பெறுவது திருவிளக்கு பூஜை (சுமங்கலிபூஜை) இந்தப் பூஜை பெண்களுக்கு உரியதாகும். கன்னிப் பெண்களும், சுமங்கலிப்பெண்களும், இந்தப் பூஜையை செய்வதால் சிறப்புப் பலாபலன்களை அடைகின்றார்கள். சர்வாபீஷ்ட மங்களங்களும் இந்தப் பூஜை செய்வதால் ஏற்படுகின்றது. திருவிளக்கிலே முத்தேவிகளும் மும்மூர்த்திகளும் வீற்றிருக்கின்றார்கள். மற்றும் விநாயகர் முதலான தெய்வங்களும் தேவர்களும் வாசம் செய்கின்றார்கள். இந்த விளக்குப் பூஜையை தினமும் காலை, மாலை, இருவேளைகளிலும் செய்யலாம். அது முடியாதவர்கள் பௌர்ணமி தினங்களில் செய்வது விஷேடமாகும்.

கடவுள் ஒளிமயமானவர் இந்த உலகத்தை ஒளிமயமாக பிரகாசிக்கச் செய்பவர்கள் சூரிய, சந்திரர் பகலில் சூரியனும் இரவில் சந்திரனுமாக இந்த லோக இருளை நீக்கி அழியாத பிரகாசமான ஒளிதரும் பொருள் வடிவாக விளங்குகின்றன. அதே போன்று இறைவனும் ஒளிமயமான சொரூபமாக விளங்குகின்றார். அதையே சமயகுரவர்கள் "சோதியே சுடரே சுழலொளி விளக்கே"....... "ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே" "இல்லக விளக்கது இருள் கெடுப்பது சொல்லக விளக்கது சோதியுள்ளது,"....... என பலவாறாக கூறியுள்ளார்கள்.

நாம் எந்தக்காரியத்தை செய்தாலும் விநாயகரை வழிபடாமல் செய்வதில்லை அதே போலத்தான் தீபம் ஏற்றாத எந்தப் பூஜையும் இந்து மத வழிபாட்டில் இல்லை எனலாம். சர்வ மங்களங்களும் அஷ்டலக்ஷ்மியின் ஐஸ்வர்யமும் பெருக! மாங்கல்ய பாக்கியம் நிலைக்கவும் மாங்கல்ய தாரணம் ஆகாதவர்களுக்கு சீக்கிரமாகவே அந்தப் பேறு கிடைக்கவும் பெண்கள் இந்தப் பூஜையை செய்வது மரபாகும். பொறுமையின் மறுபெயர் "பெண்" ஆகும். "மங்கையராக பிறப்பதற்கு மாதவம் செய்திடவேண்டும்" என்று பாடினார் "கவிமணி" விநாயகம் பிள்ளை அவர்கள். இறைவனை அன்னை வடிவில் கண்டவர் நமது மூதையர் சக்தியின் சொரூபம் அன்னை. இதனால்தான் "அம்மையே அப்பா" என கூறுகின்றார்கள். "தாயிற் சிறந்த தொரு கோவிலுமில்லை" உலக உற்பத்தியின் மூல சொரூபம் தாய்மையே.

அது மட்டுமல்லாது நமது பெண்களுக்கு ஓர் தனிச் சிறப்பு உண்டு தமது கணவர், தனது குழந்தைகள், தனது உறவினர், என மற்றவர் நலன்களில் கூடிய அக்கறை செலுத்தும் பண்பு யாருக்கும் இல்லை. இத்தனை சிறப்புடைய பெண்களுக்கு மங்கள தீபம் ஏற்றி செய்யும் பூஜை மிகவும் விருப்பமான வழிபாடாக மட்டுமல்ல கடமையாகவும் அமைந்து விடுகின்றது. இதனால்தான் வீட்டிற்கு முதல் முதலாக திருமணம் செய்து வரும் பெண்ணைக் கொண்டு விளக்கேற்றுகின்றார்கள்.

திருவிளக்கின் தத்துவமானது விளக்கின் மேல்பாக நுனியிலே ஓங்கார சொரூபமான விநாயகர் வீற்றிருக்கின்றார். விளக்கின் அடிப்பாகம் தாமரை மலர் போல் அகன்று காணப்படுகின்றது. இதனால் தாமரை மலர் மேல் இருக்கும் பிரம்மாவை குறிப்பதாக கருதப்படுகின்றது. விளக்கின் தண்டுப்பாகமானது பூமியை ஓரடியாலும் ஆகாயத்தை ஓரடியாலும் அளந்து மஹாபலிச்சக்கரவர்த்திக்கு ஏற்பட்ட கர்வபங்கத்தை அடக்கிய வாமன மூர்த்தியான மஹாவிஷ்ணுவை குறிக்கின்றது. மேல் அகல்பாகமானது நெய் அல்லது எண்ணெய் விடும் பாகமானது கங்கையை சடையில் வைத்த கங்காதரனை குறிக்கின்றது. அதுமட்டுமின்றி திரிவைக்கும் கண்ணாக விளங்கும் பஞ்சமுகம் ஈசான, தற்புருஷ, அகோர, வாமதேவ, சத்தியோஜாத, என ஈசனின் பஞ்சமுகத்தையும் குறிப்பதாகும்.

மங்களம் தரும் தீப சுடரிலே முத்தேவிகளையும் மிக அழகாக கூறப்படுகின்றது. ஜோதிரூபமாக மஞ்சள் நிறத்தில் காட்சி தரும் சுடரானது மஹா லக்ஷ்மியையும், அந்த தீப சுடரின்

நுனியிலே கண்ணுக்கு புலப்படும் வெண்மை கலந்த நீலநிற பிரகாசமானது ஞான ஒளி தரும் கலைமகளான சரஸ்வதி தேவியையும் தீபத்திலே கைவிரலை தொட்டு பாருங்கள். அது சுட்டெரிக் கும் அந்த தன்மை மகிஷாசுரமர்த்தினியான துர்க்கா தேவியையும் மிக அழகாக எடுத்து இயம்புகின்றது.

தீப விளக்கின் அகல் ,நெய், சுடர், திரி, ஆகிய நான்கும் பெண்களுக்கு உரிய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, என்ற நான்கு குணத்தையும், அறம், பொருள், இன்பம், வீடு, என்ற நான்கு புருஷார்த்தங்களையும் தர வல்லதாகும்.

தீபம் ஏற்ற தகுந்த விளக்கு பித்தளையாக இருப்பது உத்தமம். அதே போல நெய்யால் பஞ்சுத்திரிபோட்டு ஏற்றுவது மிகமிக விஷேடம். ஆனால் தற்போதைய கால சூழ்நிலையில் சில்வர், விளக்குகளே பெரும்பாலும் பாவிக்கப்படுகின் றன. அதே போல் நெய் பஞ்சுத்திரி இவையெல் லாம் எல்லா நேரங்களிலும் கிடைப்பது அரிதாகும். அதனால் கால சூழ்நிலைக்கேற்ப கிடைப்பதைக் கொண்டு மனத்தூய்மையோடு செய்யும் பூஜையை லோக மாதாவாகிய தீபலக்ஷ்மி ஏற்றுக்கொள்வார். என்பதில் சந்தேகமில்லை.

*எங்குமே நிறைந்த திங்கள் வதனதேவி*
*தங்குமே மாங்கல்ய மனநிறைவு தரவேண்டி*
*பொங்குமே புகழ் வாழ்வு மனைதேடி வரவே*
*பங்கமே நீங்கும் பளிங்கு விளக்கினால் திருவருள் தரவே*

என சகல செல்வமும் சர்வ மங்களமும் உண்டாக அனைவருக்கும் சர்வலக்ஷ்மி கிடைக்க ஒவ்வொரு பௌர்ணமியும் ஆலயங்களிலே நடை பெறும் தீப பூஜையில் அனைத்து பெண்களும் கலந்து மங்கள வாழ்வு பெற்றுய்வீர்களாக.

***"சுப மங்களம்"***

---

*ஆதிசக்தி சோதிசக்தி ஆளவந்த சக்தியே*
*ஆகமங்கள் ஆனசக்தி ஆத்ம சோதி சக்தியே*
*நீதிசக்தி நித்யசக்தி நீறு பூசும் சக்தியே*
*நீலிசக்தி நிருத்தசக்தி நீலமேனி சக்தியே*
*காதி சக்தி கானசக்தி காணுமின்ப சக்தியே*
*காளிசக்தி காயசக்தி காட்சிதந்த சக்தியே*
*வீரசக்தி தீரசக்தி வீடுகாக்கும் சக்தியே*
*சூரசக்தி சூலிசக்தி சூழும்சக்தி சக்தியே.*

*சித்தம் தெளிந்திடும் செய்வினை யாவும் திருத்தமுறும்*
*நித்தம் மறிந்தெழு செல்வமும் தங்கி நிலைபெறும் நல்*
*முத்தர்க்குரிய பெரும் பதம் வாய்க்கும் இம்மூதுலகில்*
*பக்தர் கருளும் திருமகள் பாதம் பணிபவர்க்கே.*

*பொன்னரசி நாரணனார் தேவி புகழரசி*
*மின்னு நவரத்தினம் போல் மேனி யழகுடையாள்*
*அன்னையவள் வையமெல்லாம் ஆதரிப்பாள் ஸ்ரீதேவி*
*தன்னிரு பொற்றாளே சரண்புகுந்து வாழ்வோமே.*

*வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு*
*வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பால் - வெள்ளை*
*அரியா சனத்தி லரசரோடு டென்னைச்*
*சரியா சனம் வைத்த தாய்.*

உ
சிவமயம்
"ஸ்ரீ விக்ன விநாயகர் பாதசரணம்"

# திருவருள்மிகு அன்னை ஸ்ரீ தேவி கருமாரி அம்பாள் திரு ஊஞ்சல் பாமாலை

ஆக்கியோன் : "செஞ்சொற் கவிதா சிரோமணி" ராம். தேவலோகேஸ்வரக் குருக்கள்

## காப்பு

சீர்மேவு செல்வ வளமார் திகழிலங்கைத் தீவின்
சிறந்த தலைநகராம் கொழும்பு தன்னில்
பேர்மேவு கொள்ளுப்பிட்டி பதியமர்ந்தருளும்
பெருமையுடை அன்னை கருமாரியம்பிகைபால்
நேர்மேவு செந்தமிழ் ஊஞ்சற்பா புனைந்திடவே
நேர்த்தியுடன் நல்லருள் தந்து காத்திடவே
கார் மேவு கும்பக் கஜமுகத்தோன் கழல் தொழுதேன்
கருணை கொண்டு கவியருள் தந்து காப்பதாமே

## நூல்

1. திருவளர் மார்பினிற்கினிய சோதரியே ஈஸ்வரியே
திங்கள் மலர்சிதனை வதனமதில் கொண்டவளே
கருவளர் பல்லுயிர்களுய்ய கருணையருள் புரிவளே
கங்கை சடையணிந்தோனின் காதலுக் கினியவளே
மரு வளர் பூம்பொழிலாய் மங்காதருள் புரிபவளே
மங்களமாய் மாட்சியுடன் நவதளப்பதியமர்ந்தவளே
குருவளர் தெய்வபக்தியுடை கொள்ளுப்பிட்டி பதிமேவு
குலமணியே! கருமாரி அம்மா ஆடீரூஞ்சல்

2. புவனமதில் புனித பக்திதனை கால்களாக்கி
புலன்கள் ஐந்தையுமொரு விட்டமாக்கி
நவ வடிவ நாற்கரண வடங்கள் மாட்டி
நற்பொற் பலகை தனை ஒருங்கே பூட்டி
தவ மதனை மனதிற் கொண்டு எம் தாயை யமர்த்தி
தக்க வொரு தமிழிசையால் ஊஞ்சல் பாட
சிவ சக்தி சிந்தையுடை கொள்ளுப்பிட்டி பதிமேவு
சீர்மணியே! கருமாரி அம்மா ஆடீரூஞ்சல்

3. முத்து மணித் திருமறைகள் நாற் திசைகளாக
முடிவில்லா நின் திருநாமம் பரம பந்தலாக
சித்து கொண்ட சிவாகமங்கள் வயிர விட்டமாக
சிறப்புறு கலைஞானமது நற்கயிறதாக
சக்தியுடை பிரணவமே பொற் பீடமாக
சகல ஜீவ ராசிகளும் நின் பாதமாக
பக்தி நெறி தனையுடை கொள்ளுப்பிட்டி பதிமேவு
பார்வதியே! கருமாரி அம்மா ஆடீரூஞ்சல்

4. கருங் கூந்தல் காற்றினிலே அசைந்தாட
கருமை நிற விழியிரண்டும் அருள் தந்தாட
பெரும் சினமுடை பஞ்ச நாகம் நின் திருமுடி நிழல்தந்தாட
பேத மின்றி அனைத்துலகும் நின் பாதம் போற்றியாட
அரும் தவ முனிவரெலாம் நினை சரணடைந்து துதித்தாட
அன்னையவள் மணிமாலை மார்பிலே தடம்புரண்டாட
பெரும் செல்வ வளமுடை கொள்ளுப்பிட்டி பதிமேவு
பெருநாயகியே கருமாரி அம்மா ஆடீரூஞ்சல்

5. தந்தி முகனும் மால் அரனும் நான் முகனுமாக
தவ முனிவ தேவருடன் முருகனும் வடந்தொட்டாட்ட
விந்தை யழகு தேவ மங்கையர் நாட்டியம் புனைந்தாட
வீரமணி கண்ட சாஸ்த்தாவும் வடம் தொட்டாட்ட
அந்தி நிற செங்கதி ரோன் அழகுற குடைபிடித்தாட
அந்தணர் சூழ்ந்து வேத மழை பொழிந்தாட்ட
செந்தமிழ் கவிஞ்ஞுறுறை கொள்ளுப்பிட்டி பதிமேவு
சேர் கருமாரியம்மா ஆடீரூஞ்சல்

6. இந்திரனும் சந்திரனும் நின் பாத பூஜை செய்தாட்ட
இளங்கதிரோன் நின் ஊஞ்சற் பொற்பலகை ஏந்தியாட்ட
செந்தமிழரசி கலைமகள் வீணையிசை மீட்டியாட்ட
சேர்திருமகளும் நின்னருகே சாமரம் வீசியாட்ட
கந்தனொடு வள்ளியும் குஞ்சரியும் சேர்ந்தாட்ட
களிறுடனே அகிலமே நின் கருணையால் அசைந்தாட
சிந்தை மகிழ் செம்பதியாம் கொள்ளுப்பிட்டி பதிமேவு
ஸ்ரீதேவியே! கருமாரி அம்மா ஆடீரூஞ்சல்

7. ஓங்கி யருள் உலகிற்களிக்க உதித்தவளே
ஒளிர் மேனி யழகுடை ஒப்பற்ற நாயகியே
பாங்குடனே யுனை தினம் பணிந்திடுவோர் தமக்கு
பரிவுடனே நல்வரமருளும் பரம நாயகியே
தீங்கில்லா நெஞ்சமதை தினம் கொண்டார்க்கு நின்
திருவடி பாதமதை பணிந்திட வைத்திடுவாயே
நீங்காத செல்வ வளமுடை கொள்ளுப்பிட்டி பதிமேவு
நிமலி! கருமாரி அம்மா ஆடீரூஞ்சல்

8. எத்திசையும் போற்றும் எங்கள் கருமாரிஅம்மாவை
ஏற்றிடுவோம் எழிலூஞ்சற் பொற்பலகை மீதினிலே
சித்தி விநாயகனும் சீருடன் வலப்புற மேவியருள
சிறப்புடனே கந்த வேளும் இடப்புற மேவியருள
சத்திய தெய்வம் தர்ம சாஸ்த்தாவும் வலமிருந்துகாக்க
சாற்றிடுவார் நின் புகழை நற்தமிழால் சான்றோருமே
நித்திய அருள் சுரக்க கொள்ளுப்பிட்டி பதிமேவு
நிர்மலி! கருமாரி அம்மா ஆடீரூஞ்சல்

9. திரி சூலமதை கரத்தினுள் கொண்டவளே
திகழ்ஒளியாய் மலர்ந்தருள் புரிபவளே
அரிஹரனன்பிற்கு இனியவளே கருமாரியம்மா
அன்புடனே அனைவரையும் அருள் கொண்டு காப்பவளே
உரி மையுடன் உலக நாதன் இடப்பாக மவர்ந்தவளே
உவப்புடனே லோக மாதா வென நாமம் கொண்டவளே
பரிவுடன் அன்புடை கொள்ளளுப்பிட்டி பதி மேவும்
பராசக்தியேகருமாரி அம்மா ஆடீரூஞ்சல்

10. அரு உரு கொண்டவளே ஆடீரூஞ்சல்
ஆயிரம் நாமம் முடையவளே ஆடீரூஞ்சல்
தரு மநெறி காப்பவளே ஆடீரூஞ்சல்
தாரணிக்கு அருள் கொடுப்பவளே ஆடீரூஞ்சல்
திரு மலர் மேனி கொண்டவளே ஆடீரூஞ்சல்
தீஞ் சிந்தூர வதன முடையவளே ஆடீரூஞ்சல்
பெருமையுடை கொள்ளுப்பிட்டி பதி யுறைபவளே ஆடீரூஞ்சல்
பேராரும் போற்றும் கருமாரியம்மாஆடீரூஞ்சல்

## வாழ்த்து

சீரோங்கு சிவ சின்னங்கள் வாழி வாழி
சிறப்புடை வேதாகமங்கள் வாழி வாழி
பாரோங்கு புராண இதிகாசம் வாழி வாழி
பல்லுயிர் அனைத்தும் பாரினிலே சிறந்து வாழி வாழி
நேரோங்கு அந்தண குலத்தோர் வாழி வாழி
நெறி தவறா கற்புடை மங்கையர் வாழி வாழி
பேரோங்கு கொள்ளுப்பிட்டி பதி வாழி வாழி
பெருமையுடை கருமாரி அருள் வாழி வாழி

## சுப மங்களம்

கருமாரி அம்பாள் ஊஞ்சற்பாமலை முற்றிற்று
ஆக்கியோன் துன்னையூர் ராம் தேவலோகேஸ்வரக் குருக்கள்
(ஸ்ரீதேவி கருமாரி அம்பாள் தேவஸ்த்தானகுரு)

- ஊழியம் செய்பவன் அடிமையும் இல்லை. ஊதியம் கொடுப்பவன் ஆண்டவனும் இல்லை.
- கருத்துக்களும் யோசனைகளும் மிகவும் உயர்ந்தவை தாம். என்றாலும் நடை முறையிலேயே பயன்படத்தக்கதாகச் செய்வதே முக்கியம்.

– சான்றோர் மொழிகள்

# மெய்யருள் தரும் ஸ்ரீ ஐயப்ப சுவாமி

*ராம். தேவலோகேஸ்வரக் குருக்கள்.*

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்ற கூற்று வெறும் பேச்சளவில் மட்டுமல்ல செயலி லும் நிரூபணமாகின்றது என்பது மறுக்க முடியா தது. செய்யும் தொழிலுக்கும், சமூக மேன்பாட் டுக்கும் மட்டுமல்ல ஆன்மீகத்திற்கும் இது சிறந் தது. இதற்கு உதாரணம் ஸ்ரீ ஐயப்பவிரதமாலை" கார்த்திகை மாதம் பிறந்து விட்டால் போதும். கறுப்பு, நீலம், என வேஷ்டி அணிந்து கழுத்தில் மாலை அணிந்து நெற்றியில் விபூதி பட்டையோடு சந்தணம் குங்குமம் இட்டு யாரை யார் பார்த்தா லும் "சாமி சரணம்" என்று கூறி இரு கையும் எடுத்து கும்பிடு போடும் காட்சி அனைவரையும் மெய் சிலிர்க்க வைக்கும் காட்சியாகும். ஒரு வருட வாழ்வில் மனிதன் 60 நாட்களாவது ஆன்மீ கத்திற்கு ஒதுக்க வேண்டும் என்றால் நிச்சயம் ஐயப்ப விரத மாலை அணிய வேண்டும்.

அந்த மாலை அணிந்ததும் அவர்களை அறியாமலே அவர்களிடம் அமைதி, அடக்கம், பக்தி, எல்லாம் எங்கிருந்தோ வந்து குடிகொண்டு விடுகின்றன. அந்த இயல்பு ஐயப்பனின் அருளா கும். எமது ஆலயத்தில் மாலை அணிந்து விரதமி ருந்த சாமிமார்களிடம் நான் நேரில் கண்ட உண்மை இது. அது மட்டுமின்றி மலை ஏறிவரும் ஒவ்வொரு கன்னிச் சாமி மாருக்கும் மாலை கழற்றியவுடன் எதிர்பார்த்த நன்மையும் திருப்பமும் நடைபெற்று இருக்கின்றது. பெரியவன் சிறிய வன் என்ற பேதமின்றி தம்மை மறந்து ஐயனை நோக்கி பாடும் ஆனந்த பஜனையானது எல்லோ ரையும் மெய்மறக்கச் செய்யும் கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாய் கேட்ட வரமனைத்தை யும் தரும் கற்பக விருக்ஷமாய் பம்பாநதி வாசனாய் பாலமணி கண்டனாய் என்றும் சர்வமங்கள அருள் வழங்கும் பூர்ண புஷ்கலை சமேத ஸ்ரீ தர்ம சாஸ்த்தா எல்லோருக்கும் அருள் நல்க வேண்டும்.

எமது ஆலயத்தில் அன்னை கருமாரியின் வலது புறத்திலே பதினெட்டு படிகளுடன் கூடிய ஸ்ரீ தர்ம சாஸ்த்தா ஆலயம் எழில் அழகு தருகின் றது. முறுவல் பூத்த வதனமும், அபயகரம் கொடுக் கும் வலது திருக்கரமும் எல்லோரும் முடிவில் அடைவது இறை பாதமே என்பதை நிரூபிக்கும் வகையில் இடது கரம் முழந்தாலில் இருந்து பாதத்தை காண்பிக்க, மாலை அணிந்து தன்னை நாடிவரும் பக்தர்களுக்கு மனக் கட்டுப்பாடு மிகவும் முக்கியமானது என்பதை உணர்த்த இரு முழந்தாழயும் சுற்றி திருக்கட்டு போட்ட அமர்வு. என ஐயன் இருக்கும் கோலம் அனைவ ரையும் மெய் சிலிர்க்க வைக்கும். ஆனந்த மூர்த்தி யான ஐயப்பனின் அற்புதக் கீர்த்தி எழுத்தில் வடிக்க முடியாததாகும். தீய குரோத குணங் களை கொண்ட கொடிய கலியுகத்திலும் மெய்ய ருள் தரும் ஐயப்பனாக அனைவரையும் காத்து அருள் புரிவது அற்புத செயலாகும்.

*மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு*
*சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு*
*தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு*
*செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான் றிருநீறே*

*பூசவினியது நீறு புண்ணியமாவது நீறு*
*பேசவினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்*
*ஆசைகெடுப்பது நீறு வந்தமதாவது நீறு*
*தேசம் புகழ்வது நீறு திருவாலவாயான் றிருநீறே*

# ஸ்ரீ அஷ்ட லக்ஷ்மி வழிபாடு

"பிரதிஸ்டா பூஷணம்" நயினை சுவாமிநாத பரமேஸ்வர குருக்கள்.

*"திருமாலவனின் திருமாற்பிலகும்
திருமாமகளே நின்தாள் பணிய
மருளும் பிறவும் மயலும் விலகும்
மனமேல் எழுவாய் அமுதக் கொடியே"*

பூமியில் பிறந்த எவரும் தான் கஷ்டப்படாமல் சுவவாழ்வு வாழ வேண்டும் என்றே எண்ணுகிறார்கள். அவ்வாறு நினைப்பதில் தவறு ஏதுமில்லை. ஆனால் பூர்வ ஜென்ம கர்ம பலனை ஒட்டியே துன்பங்கள் உண்டாகின்றன. தெய்வ சகாயமும் கடவுளின் கருணையில் அபார நம்பிக்கையும் கொண்டு இறைவனை பக்தி சிரத்தையுடன் வழிபடுவது தான் துன்பங்கள் நம்மை அதிகம் பாதிக்காதிருக்க வழியாகும். இதனை பல புராண இதிகாசங்கள் மூலம் அறியலாம். இவ்வாறு நம்பிக்கையுடனும் பக்திசிரத்தையுடனும் செய்யப்படும் எந்த தெய்வீகக் காரியங்களும் வீண்போகாது. நல்ல பலனையே கொடுக்கும். கீதையில் பகவான் "நஹி கல்யாணக்ருத்கஸ்சித் துர்கதிம் தாதகச்சதி" நற்காரியங்கள் செய்பவன் நிச்சயம் க்ஷேமத்தை அடைவான் என்று உறுதியாக கூறுகிறார்.

*"அருளில்லார்க்கு அவ்வுலகு இல்லை
பொருளில்லார்க்கு இவ்வுலகில்லை"*

என்று அன்று கூறிய திருவள்ளுவர் வாக்கு இன்றைய நிலைக்கு உகந்ததாக விளங்குகின்றது. பணத்தை வைத்தே ஒருவனைப் பற்றி எடைபோடும் காலம் இது. எல்லோரும் ஒரே நோக்கத்திற்காக உழைத்தாலும் ஊதியத்தில் வித்தியாசம் இருப்பதைக் காண்கின்றோம். இதற்கு அவரவர் செய்த கர்ம பலனே காரணமாகும். நாம் நல்ல வழியில் உழைத்து அதற்கு ஏற்ற ஊதியமோ இலாபமோ பெற லஷ்மி தேவியின் அருள் நிச்சயம் வேண்டும். லஷ்மி தேவியின் பாத கமலங்களைத் தொழுவார்க்கு நிலையான தொழில், பதவி, யாவும் அவளருளால் தானாகவே கிட்டும்.

லஷ்மி என்ற செல்லுக்கு கருணை என்று பொருள். மஹாலஷ்மியின் கருணாகடாக்ஷத்தால் நமக்கு சகல சௌபாக்கியங்களும் கிட்டும் என்பது திண்ணம். ஐயவர்யத்தோடும் நல்ல அழகுடனும் திகழ்பவர்களைப் பார்க்கும்போது "ஆஹா! என்ன லக்ஷ்மி கடாக்ஷம்" என்று வியக்கின்றோம். "பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க" என்று வாழ்த்துகின்றோம். இந்தப் பதினாறு பேறும் பெறுவதுதான் லக்ஷ்மீகடாக்ஷம். புகழ், கல்வி, வீரம், விஜயம், சந்தானம், துணிவு, ஐஸ்வர்யம், தான்யம், சௌபாக்கியம், போகம், சௌந்தர்யம், நல்லறம், நல்லறிவு, பெருமை, ஆரோக்கியம், நீண்ட ஆயுள் ஆகிய இந்த பதினாறும் அஷ்ட லக்ஷ்மியைத் துதிக்கும்போது நமக்கு கிட்டுகின்றது என்பது பெரியோர் வாக்கு.

அஷ்டம் என்றால் எட்டு அஷ்டலக்ஷ்மிகளைத் தொழும்போது நமக்கு அஷ்ட ஐஸ்வர்யங்களும் கிடைக்கின்றன. ஸ்ரீ லக்ஷ்மியை வில்வம், தாமரை, சாமந்தி முதலிய மலர்களால் அர்ச்சித்து வணங்குவது சிறந்ததாகும். ஆதிலக்ஷ்மி, சந்தான லக்ஷ்மி, கஜலக்ஷ்மி, தனலக்ஷ்மி, தான்யலக்ஷ்மி, விஜயலக்ஷ்மி, மஹாலக்ஷ்மி, வீரலக்ஷ்மி, என்னும் அஷ்டலக்ஷ்மிகளால் அஷ்ட ஐஸ்வர்யங்களும் சித்திக்கும். ஸ்ரீலக்ஷ்மி, சுவர்க்கலக்ஷ்மி, பாக்யலக்ஷ்மி, ப்ரீதலக்ஷ்மி, கீர்த்திலக்ஷ்மி என்று இன்னும் பல்வேறு நாமங்களால் அந்தந்த இடத்திற்கேற்ப அழைத்து மஹாலலக்ஷ்மியை வாழ்த்தி துதிக்கின்றார்கள். அஷ்ட லக்ஷ்மி என்று பொதுவாகச் சொன்னாலும் எண்ணிலடங்காத பல்வேறு நாமங்களில் நமது இன்னல்களைக் களைந்து இன்ப வாழ்வைத் தந்தருள்பவர் ஸ்ரீ மகா லக்ஷ்மியே ஆகும்.

லக்ஷ்மி தேவி மஹாவிஸ்ணுவின் இருதயத்தில் வாசம் செய்கிறாள். தேலேந்திரன் இழந்துவிட்ட ஐஸ்வர்யங்களை மீட்டுக் கெடுக்கு லக்ஷ்மி தேவி பாற்கடலில் தோன்றினாள். ஸ்ரீ என்றால் லக்ஷ்மி இதனால் தான் மஹாவிஸ்ணுவிற்கு ஸ்ரீநிவாசன் திருமால் என்ற பெயர்கள் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது. எம்பெருமானின் திருமார்பின் வலப்புறத்தே ராதிகா தேவியாயும் இடப்புறத்தே லக்ஷ்மி தேவியாயும் ஸ்ரீ மஹாலக்ஷ்மி விளங்குகின்றார்.

இதுமட்டுமன்று, சுமங்கலிகள், பூர்ண கும்பம், மஞ்சள், குங்குமம், திருமண், கோலம், சந்தனம், வாழை, வெற்றிலை, திருவிளக்கு, பசு, யானை, கண்ணாடி, தீபம், அழகு, துணிவு, பொறுமை, ஆற்றல், பரோபகாரம், இறைபக்தி, வில்வம், நெல்லி, துளசி, கோமயம், சங்கு, தாமரை வெண்நிற ஆடைகள், பணப்பெட்டி போன்றவற்றிலும் திருமகள் வாசம் செய்கிறாள்.

தை, சித்திரை, புரட்டாதி, மாதங்களில் திருபாற் கடலில் மஹாவிஸ்ணு மஹாலக்ஷ்மியைப் பூஜிப்பதாக ஜதீகம் பிரம்மதேவன் மஹாலக்ஷ்மியை புரட்டாதி மாத சுக்கிலாஷ்டமியிலும், மனுதேவன் தை, மாசி, சங்கிராந்தியிலும், வருஷ முடிவிலும், பூஜிப்பதாகக் கூறப்படுகின்றது. ஆவணி மாதத்தில் வரும் வெள்ளிக்கிழமைகளில் கர்நாடகத்திலும் மார்கழியில் வரும் வியாழக்கிழமைகளிலும் ஆந்திரத்திலும், தீபாவளி சமயங்களில் வடநாட்டிலும் லக்ஷ்மி தேவியை விசேஷமாகப் பூஜிப்பார்கள்.

தமிழ் நாட்டிலும் மற்றும் ஆலங்கையிலும் ஆவணி மாத சுக்கில பக்ஷத்து வெள்ளிக்கிழமையில் வரலக்ஷ்மி விரதம் மிகச் சிறப்பாக அனுஷ்டிக்கப்படுகிறது. ஸ்ரீலக்ஷ்மி திருவிளக்கிலும், துளசியிலும் சான்னித்யம் பெற்றிருப்பதால் திருவிளக்கு பூஜையும், துளசி பூஜையும், பெண்கள் செய்வது சகல சௌபாக்கியத்திற்கும் உகந்ததாகும். இவற்றை விட சிறப்பாக செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் ஆண், பெண், இருபாலாரும் முறைப்படி விரதம் இருந்து லக்ஷ்மீ பூஜை செய்வது சாலச்சிறந்ததாகும். ஸ்ரீ ஸூக்தம் பாராயணம் செய்து ஹோம வழிபாடு செய்வது மேலும் சிறந்ததாகும்.

ஸ்ரீ ஆதி சங்கரர் குருகுலவாசத்தின் போது வீடு வீடாகச் சென்று “பவதி பிக்ஷாம் தேஹி” என்று கேட்ட போது ஒரு வீட்டிலிருந்த ஏழைப் பெண்மணி ஓர் அழுகிய நெல்லிக்கனியைத் தந்தபோது, அந்த பெண்மணிக்காக ஆதிசங்கரர் மஹாலக்ஷ்மியைத் துதித்து ஸ்தோத்திரம் பாடிய போது தங்கநெல்லியையே அம்பாள் பொன் மாரியாகப் பெய்வித்தாள். அப்படிப்பட்ட கனக தாரா ஸ்தோத்திரத்தை அனுதினமும் பாராயணம் செய்வோருக்கு சகல ஐஸ்வர்யங்களும் மஹாலக்ஷ்மியின் அருளால் கிட்டும். இதே போன்று ஸ்ரீ ஸ்துதிக்கும் இதே மகிமை உண்டு. காஞ்சியிலே மஹாலக்ஷ்மியை பிரார்த்தித்து ஸ்ரீ ஸ்துதியைப் பாடிய வேதாந்த தேசிகருக்காகவும் அன்னை பொன்மாரி பொழிந்திருக்கிறாா்.

இவ்வாறு ஆதிசங்கர் வேதாந்த தேசிகர், வித்யாரண்யர், தேவேந்திரன், தேவர்கள், போன்ற பலரும் ஸ்ரீ லக்ஷ்மியைப் போற்றித் துதித்துப் பாடி அன்னையின் அநுக்ரஹத்தைப் பெற்றார்கள். மஹாலக்ஷ்மியைப் பூஜிப்பவர்கள் பற்றி தேவிபாகவதம் மிகவும் விஸ்தாரமாகச் சொல்லுகிறது. எனவே நாமும் அஷ்டலக்ஷ்மியை அனுதினமும் முறைப்படி பூஜித்து அஷ்ட ஐஸ்வர்யங்களையும் பெற்று சகல சௌபாக்கியங்களோடும் வாழ்வோமாக.

*பக்தியால் யானுனைப் பலகாலும்*
*பற்றியே மாதிருப் புகழ்பாடி*
*முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்*
*முத்தியே சேர்வதற் கருள்வாயே*
*உத்தமா தானசற் குணநேயா*
*ஒப்பிலா மாமணிக் கிரிவாசா*
*வித்தகா ஞானசத் திநிபாதா*
*வெற்றி வேலாயுதப் பெருமாளே.*

## ஸ்ரீதேவி கருமாரி அம்மன் ஸ்ரீ ஐயப்பசுவாமி திருக்கோவில்

# அறங்காவலர்கள்.

| | |
|---|---|
| *அறங்காவலர்.* | திரு. S. செல்வரட்ணம் |
| *ஆலயநிர்வாகி.* | திரு. S. செல்வக்குமார் J. P. |
| *மற்றும்* | திரு. S. சிவக்குமார் |
| | திரு. S. ஷண்முககுமார் |
| | திரு. S. ராஜ்குமார் |
| | திருமதி. சந்திரமோகன். |

## தேவஸ்த்தான குருமார்கள்

| | |
|---|---|
| *பிரதமகுரு :* | சிவஸ்ரீ ராம். தேவலோகேஸ்வரக் குருக்கள்<br>சிவஸ்ரீ பா. ரவீந்திரக்குருக்கள். |
| *ஆலய கும்பாபிஷேக தினம் :* | 03. 12. 1993 கார்த்திகை மாத<br>புனர் பூச நக்ஷத்திரம். |
| *நூதன பரிபார மூர்த்திகள்<br>கும்பாபிஷேகதினம் :* | 22. 03. 1996 பங்குனி மாத<br>அச்சுவினி நக்ஷத்திரம் |
| *புதிய சித்திரத்தேர்<br>வெள்ளோட்டம் :* | 09. 12. 1995. |
| *புதிய சித்திரத்தேர் திருவிழா :* | 10. 12. 1995. |

---

✢ *கல்வி என்ற மரத்தின் வேர் கசப்பானது தான். ஆனால் அதன் பழங்கள் இனிப்பானவை.*

✢ *தந்தையின் நற்குணம் மலையைவிடப் பெரிதானது. தாயின் நற்குணம் கடலைவிட ஆழமானது.*

*- சான்றோர் மொழிகள்*

# ஆலயத்தில் நடைபெறும் வருட விழாநிகழ்வு உபயகாரர்கள்

| மாதம் | விழா நிகழ்வு | உபயக்காரர் |
|---|---|---|
| சித்திரை | சித்திரா பௌர்ணமி<br>வருஷப் பிறப்பு | திரு. செல்வக்குமார் |
| வைகாசி | வைகாசி விசாகம் | திரு. ஸ்ரீஸ்கந்தராசா |
| ஆனி | ஆனி உத்தரம் | திரு. S. புவனச்சந்திரன் |
| ஆடி | ஆடிச்செவ்வாய்<br>ஆடிவெள்ளி<br><br><br><br><br><br><br><br>ஆடிப்பூர ருது சோரனவிழா | திரு. பரமநாதன்<br>திருமதி. சிவலிங்கம்<br>திரு. சித்திரகுமார்<br>திருமதி. ஸ்ரீதரன்<br>திரு. V. C. மேதிலால்நேரு<br>திரு. நவீன்<br>திரு. T. தர்மராஜா<br>திரு. இராஜேஸ்வரன்<br>திரு. பாலமுரளி<br>திரு. மகேந்திரன் |
| ஆவணி | ஸ்ரீ வரலக்ஷ்மி விரதம்<br>ஆவணிச்சதுர்த்தி<br>ஸ்ரீ கிருஷ்ணஜெயந்தி | திரு. இளமைநாதன்<br>திரு. இராஜரட்ணம்<br>திருமதி. கோசலை சண்முககுமார் |
| புரட்டாதி | நவராத்திரி | திருமதி. புவனேஸ்வரி (காலை)<br>செல்வி. S. சிவகலை (மாலை)<br>திருமதி. குமாரிகலா (காலை)<br>திரு. மோகன்ராஜ் (மாலை)<br>திரு. கணேசதாசன் உமேஷ் (காலை)<br>வீரையா விவேகானந்தன் (மாலை)<br>திரு. நடனமைந்தன் (காலை)<br>திருமதி. பாமினிசோஷன் (மாலை)<br>திரு. சர்வேஸ்வரன் (காலை)<br>திருமதி. செல்வரஞ்சன் (மாலை)<br>திரு. ரகுபதி (காலை) |

| | | |
|---|---|---|
| | | திருமதி. செல்வநாயகம் (மாலை)<br>செல்வி. தேவகி (காலை)<br>திரு. S. T. தியாகராஜா (மாலை)<br>திரு. V. K. ஜெயபாலசிங்கம் (காலை)<br>திரு. சிவகுமார் (மாலை)<br>செல்வி. சோபனா (காலை)<br>திரு. சுரேஷ் ராஜி (மாலை) |
| | விஜயதசமி (மானம்பூ)<br>புரட்டாதி சனி | திரு. மகேஸா<br>திரு. வீரையா விவேகானந்தன்<br>திரு. சந்திரபோஸ்<br>திருமதி. மகேந்திரன்<br>திரு. இராஜகுலேந்திரன் |
| | கேதார கௌரி நோன்பு | திரு. K. திருச்செல்வம் (அபிஷேகம்) |
| ஐப்பசி | கந்தஷஷ்டி | திரு. ரஞ்சன் (காலை)<br>திரு. சயந்தகுமார் (மாலை)<br>திரு. S. பரந்தாமன் (காலை)<br>திருமதி. கலாசிவலிங்கம் (மாலை)<br>திரு. M. செல்வரட்ணம் (காலை)<br>திரு. B. சுந்தரலிங்கம் (மாலை)<br>திரு. V. நடராஜா (காலை)<br>திருமதி. இளமைநாதன் (மாலை)<br>திரு. சிவகுமார் (காலை)<br>திரு. ஹரிகரன் (மாலை)<br>திரு. நடராஜா (காலை)<br>திரு. T. அமிர்தலிங்கம் (மாலை) |
| | தீபாவளி | திரு. S.செல்வகுமார் J.P. |
| கார்த்திகை | பிள்ளையார்க்கதை (பெருங்கதை)<br>ஐயப்ப படிப்பூஜை | திருமதி. கோசலை சண்முககுமார்<br>திருமதி. மாலதி சிவனேந்திரம்<br>திரு. மனோகரலிங்கம்<br>திரு. இராமநாதன்<br>திரு. ரஞ்சன்<br>திரு. பாலகிருஷ்ணன்<br>திரு. கே. முத்துலிங்கம்<br>திருமதி. தியாகராஜா<br>செல்வி. தமிழரசி<br>திரு. பிரம்மநாயகம்<br>திரு. வீராயா விவேகானந்தன்<br>திரு. S. ஸ்ரீகாந்தா |

| | | |
|---|---|---|
| | சர்வாலய தீப அபிஷேகம்<br>வருஷாபிஷே லக்ஷசார்சனை | திரு. செல்வகுமார்<br>திரு. சாந்தலிங்கம் (காலை)<br>திரு. வீரையா விவேகானந்தன் (மாலை)<br>ஆலய உபயம் (காலை)<br>திருமதி. வரதராஜன் (மாலை)<br>திரு. ஜெயநேசன் (காலை)<br>திரு. இராமநாதன் (மாலை)<br>ஆலய உபயம் (காலை)<br>திரு. இராமநாதன் (கொ 6) (மாலை)<br>S. R. S. கனகரட்ணம் (காலை)<br>திருமதி. விஜயேந்திரன் (மாலை)<br>திரு. ராஜு (வாகிணி ஜு) (காலை)<br>திரு. K. ஜெயபாலசிங்கம் (மாலை)<br>திரு. சிறீகாந்தா (காலை)<br>திரு. A. S. செல்வநேசன் (மாலை)<br>Dr. சிறீதேவா (மெடிசொப்) (காலை)<br>திரு. K. P. ராஜ் (மாலை)<br>திரு. V. T. V. தெய்வநாயகம் (காலை)<br>திருமதி. ராகினி, நளாயினி (மாலை)<br>திரு. E. K. ஆறுமுகம் (காலை)<br>திரு. இராஜகுலேந்திரன் (மாலை) |
| | மணவாளகோல சங்கா<br>பிஷேகம் தேர்திருவிழா<br>தேர் பிராயசித்த அபிஷேகம் | திரு. செல்வக்குமார் J. P.<br>திரு. சுந்தர் |
| மார்கழி | திருவெம்பாவை | திரு. பாலசுப்பிரமணியம்<br>திரு. பிரதாபன்<br>திரு. பால்ராஜ்<br>திருமதி. இரவீந்திரதேவா<br>திரு. ஜெயராஜசிங்கம்<br>திரு. வீரையா விவேகானந்தன்<br>திரு. விமலேந்திரன்<br>திரு. கிருஷ்ணராஜா<br>திரு. Dr. யோகேந்திரா<br>திரு. நற்குண சிங்கம் |
| | வைகுந்த ஏகாதசி<br>மூல நக்ஷதிரம்<br>ஆஞ்சநேய ஜெயந்தி<br>ஆங்கிலவருடப்பிறப்பு<br>இரவு 12மணி | திருமதி. கோசலை சண்முககுமார்<br><br>கோவில் உபயம்<br><br>திரு. ஜெயநேசன் |

| | | |
|---|---|---|
| தை | தைமாதபிறப்பு (தைபொங்கல்)<br>தைபூசம் | திரு. சுந்தர் (அபிஷேகம்)<br>திரு. விஜே (லங்கா போட்டோ) |
| மாசி | மாசிமக ஏழு நாள்<br>அபிஷேக விழா | திரு. வசந்தராசா<br>திரு. ராமநாதன்<br>திரு. இரா. மாசிலாமணி<br>திரு. குணரத்தினம்<br>திரு. ரஞ்சன்<br>S. K. R. கொம்பனி |
| | மாசிமக தீர்த்த உற்சவம்<br>மஹா சிவராத்திரி | திரு. மகேஸா<br>திரு. ஸ்ரீகாந்தா<br>திரு. தேவதாசன்<br>திரு. நாகேந்திரம்<br>திரு. மயூரநாதன் |
| பங்குனி | பங்குனி உத்தரம் அம்மன்<br>பங்குனி உத்தரம் ஐயப்பன்<br>ஸ்ரீ ராம நவமி<br>பங்குனிமாத சதுர்த்தி | திருமதி. அமுதாஸ்கந்தன்<br>திருமதி. மாலதி சிவனேந்திரன்<br>திருமதி. பாமினி ரோஷான்<br>திரு. பரராஜசிங்கம் |

*தலையே நீ வயங்காய் - தலை*
*மாலை தலைக்கணிந்து*
*தலையாலே பலித்தேருந் தலைவனை*
*தலையே நீ வணங்காய்.*

❉ ❉

*கைகாள் கூப்பித் தொழீர் - கடி*
*மாமலர் தூவிநின்று*
*பைவாய்ப் பாம்பரை யார்த்த பரமனைக்*
*கைகாள் கூப்பித் தொழீர்.*

❉ ❉

*தேடிக் கண்டு கொண்டேன் - திரு*
*மாலொடு நான்முகனுந்*
*தேடித் தேடொணாத் தேவனை யென்னுளே*
*தேடிக் கண்டு கொண்டேன்*



**10.12. 1995** அன்று
புதிய சித்திரத்தேர்
வீதி உலா வரும் காட்சி



**9. 12. 1995** புதிய சித்திரத்தேர்
வெள்வோட்ட விழா



**18** படிகளுடன் கூடிய
ஸ்ரீதர்ம சாஸ்த்தர் ஆலயம்
படிப்பூஜை நடைபெறும்
காட்சி **(3.12.1993)**



**22. 3. 96** அன்று
நடைபெற்ற நூதன பரிபார
மூர்த்தி கும்பாபிஷேக
பாக சாலை.

# என்றும் இனிய நன்றியுடையோர்

❋ நூதன பரிபார மூர்த்திகளின் கும்பாபிஷேக விழாவின் போது நடைபெற்ற கிரியா வைபவங்களுக்கு முன்நின்று தொண்டாற்றிய "அஸ்ரல்" கட்டிட சக ஊழியர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகள்.

❋ மஹா கும்பாபிஷேக விழாவை மிகச்சிறப்பாக நடாத்திய சிவாசாரியர் நயினை சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள், சர்வசாதகர் ஸ்ரீ விஸ்வ நாராயணசர்மா மற்றும் அந்தன சிவாசாரிய பெருமக்கள் அனைவருக்கும் நன்றிகள் பலகோடி.

❋ "கும்பாபிஷேக மலர்" இதழுக்கு "ஸ்ரீமுகம்" எழுதி அனுப்பிய காஞ்சி காமகோடிபீடாதிபதி ஜெயேந்திரசரஸ்வதி சுவாமிகளின் பொற்பாத கமலங்களுக்கு பல கோடி நமஸ்க்காரம்.

❋ குறுகிய கால எல்லைக்குள் ஆலயத்தை அழகுற கட்டியமைத்த சிற்பாசாரியார் அராலியூர் S. மகேஸ்வரன் குழுவினருக்கும் மனப்பூர்வமான நன்றிகள்.

❋ கும்பாபிஷேக மலருக்கு சிறந்த கட்டுரைகள் வழங்கிய பெரியார்கள் அனைவருக்கும் எமது மனப்பூர்வமான இனிய நன்றிகள்.

❋ எமது கும்பாபிஷேக விழாவிற்கு நாதஸ்வர இன்னிசை வழங்கி சிறப்பு ஏற்படுத்திய நாதஸ்வர வித்துவான் ரத்தினம் குழுவினருக்கு எமது நன்றிகள்.

❋ கும்பாபிஷே விளம்பரத்தை சிறப்பாக வெளியிட்ட பத்திரிகைகளின் முதற் கட்டமாக "சூடாமணி" ஆசிரியர் S. T. சிவநாயகம் அவர்கட்கும் மற்றும் வீரகேசரி தினகரன் ஆசிரியர்கட்கும் எமது நன்றிகள்.

❋ கும்பாபிஷேக மலருக்கு விளம்பரங்களை வழங்கிய வியாபார அன்பர்கள் அனைவருக்கும் எம்து மனமார்ந்த நன்றிகள்.

❋ மிகக் குறுகிய காலத்தில் சிறப்பாக மலரை அச்சிட்டு வெளியிட்ட அச்சகத்துக்கும் எமது நன்றி என்றும் உரித்தாகட்டும்.

❋ சகல வழிகளிலும் எமக்கு உதவிய சகல அன்பர்கள் அனைவருக்கும் அன்னை கருமாரியின் திருவருள் கிடைக்க வேண்டும் என மனமாற பிரார்த்திக்கின்றோம்.

*சுப மங்களம்.*

ஆலய நிர்வாகி
**S. செல்வக்குமார் J. P.**

ஆலய பிரதமகுரு
**ராம். தேவலோகேஸ்வரக் குருக்கள்.**
(மலர் ஆசிரியர்)

*With Best Compliments From:*

**Pacific Metals Private Limited**

366, OLD MOOR STREET, COLOMBO - 12, SRI LANKA.
Telephone : 448380, 332528
Fax : 345884.

*With Best Compliments From :*

FURNISHING,
CURTAINING &
BEDLINEN

# CURTAIN SHOP

337, Galle Road, Colombo - 3, Sri Lanka.
Telephone : 576407

***TAILORING UNDERTAKEN***

*With Best Compliments From:*

# Bg Bgrothers (Pvt) Ltd.

## Bg Building

110, 112, Wolfendhal Street, Colombo 13, Sri Lanka.

Telephone : 332949, 332950, 328729
Fax : 439623, 576273

*With Best Compliments From:*

# MAAHES HOUSE

**GENERAL MERCHANTS, GROCER,
FOREIGN FOODS**

390, Galle Road, Colombo - 03, Sri Lanka.
Telephone : 577398

*With Best Compliments From :*

# WIMALSONS TRADE CENTRE

**Dealers in : Animal Poultry Foods & Medicines**

27, Wolfendhal Street, Colombo 13, Sri Lanka.
Telephone : 433137, 332336

*With Best Compliments From:*

# U. V. W. Private Ltd.

351, 4th floor, R. A. De Mel Mawatha,
Colombo 3,
Sri Lanka.

*With Best Compliments From:*

**U - Rent**

*For Your needs in the rental of office Equilpments :-*

- ❋ Telex Machines
- ❋ Fax Machines
- ❋ Computers

Contact - 577706 & 07251464, Fax : 575724
282 - 2 / 1A, 2Nd Floor, R. A. De. Mel Mawatha, Colombo - 3,
Sri Lanka (Next to Liberty Plaza).

**Telecom Inernational (Pvt) Ltd.**

*For Your*

- ❋ Telex Machines
- ❋ Fax Machines
- ❋ Telephone & Pabx Systems
- ❋ Computers
- ❋ Modems
- ❋ Cordless Phones
- ❋ Answering Machines

Contact - 577706 & 07251464, Fax : 575724
282 - 2 / 1A, 2Nd Floor, R. A. De. Mel Mawatha, Colombo - 3,
Sri Lanka (Next to Liberty Plaza).

*With Best Compliments From :*

**MADUSHA TEXTILE**

# 163 B. C. Keyer Street, Colombo 11, Sri Lanka.
Telephone : 336531, 327249

*With Best Compliments From :*

**Gokule Raadhai**

184, Sea Street, Colombo 11, Sri Lanka. Telephone : 421912

*Dealers in : Stainless Steel & Gift Items*

*With Best Compliments From :*

# RUBY STEEL COMPANY

*Dealers in Hardware and Building Materials Etc.*
*Pioneer Sellers of Lanka Tor Steel*

465, Old Moor Street, Colombo 12, Sri Lanka.
Telephone : 433855, 438482

*With Best Compliments From:*

# R. S. P. R. Enterprises

**FOOD ITEM'S IMPORTS**

No. 115, Second Cross Street, Colombo - 11,
Sri Lanka.

*With Best Compliments From:*

- திருமண வைபவங்கள்
- பிறந்தநாள் கொண்டாட்டங்கள்
- புதுமனை புகுவிழா
- கோவில் அன்னதானங்கள்
- மற்றும் நிகழ்ச்சிகளுக்கு அறுசுவை சைவ உணவு வகை களுக்கு Orderகள் உடனுக்குடன் ஏற்றுக்கொள்ளப்படும்

# NEW MALAYAN CAFE

439/1, Galle Road, Wellawatta.

*With Best Compliments From :*

# Continental Restaurants Holdings (Pvt) Ltd.

Colombo, Sri Lanka.
Telephone : 580678
Fax : 91 / 584174

*With Best Compliments From:*

# Marine & Heavy Equipments Suppliers

# S. P. S. Automobiles (Pvt) Ltd.

IMPORTERS OF USED DIESEL ENGINES &
SPARE PARTS FOR ALL VEHICLES

**Head Office :** 251 / 18, Sri Sangaraja Mawatha, Colombo - 10.
**Branch Office :** 130, Katugastota Road, Kandy.
**Estate :** Binoya (A) Estate Tel : 438571, 430743
Fax : 423245 car Tel : 072 - 44237
**Hand Tel :** 078 - 66423 Res : 341579

*With Best Compliments From:*

# Jayalalitha

JEWELLERY MART

65, S»a Street,, Colombo 11, Sri Lanka.
Telephone : 449177, 422548.

*With Best Compliments From:*

**FUJITSU GENERAL AGENCIES (PVT) LTD.**

345, R. A. De Mel Mawatha, Colombo 3, Sri Lanka.
Telephone : 574625 Fax : 447799
Telex : 21517 Medica CE.

*With Best Compliments From:*

**Hotel Empress**

RESTAURANT *Kolio*

KARA OKAE BAR

383, R.A. De Mel Mawatha (Duplication Road), Colombo - 03, Sri Lanka.
Telephone : 574930, 577405, 577406 Fax : 94 - 1 - 574931
Telex : 21381 COBAMIL CE.

எமது வாழ்த்துக்கள்

நங்கையர் மனதை
கொள்ளை கொள்ளும்
நவீன டிசைன்களில்
தரமான 22 kt தங்க நகைகளுக்கு
பம்பலப்பிட்டியில்,

**Jaya Lalithanghi** *Jewellers*

225, Galle Road, Bambalapitiya, Colombo 4, Sri Lanka.
Telephone : 595144.

*With Best Compliments From :*

# S. S. Multi Marketing Services

**53 / A, Waidya Road, Dehiwala, Sri Lanka.**

**DISTRIBUTORS FOR :**

*Scan Imports Ltd., Delmege Forsyth & Co. Ltd.,*
*Stassen foods Pvt Ltd.*



## ஐயப்ப பதிகம்

களிறொடு பிடியும் கூடிக்களித்திடும் பம்பை யாற்றின்
வள நிறை மருங்கில் மன்னும் மாண்புடைச் சபரிகிரியோன்
வளர்பிறை சூடுஞ் சிவனும் விஷ்ணும் தந்த மகனாம்
ஒளிநிறை உருவின் ஐயன் உபயமென் பாதம் சரனே

*Printed by :* ***Uthayam Graphics***